

ஜனவரி · எட்டு அணா ·
108
ஜுபிடரின்
மர்மயோகி
பொங்கல் பரிசு

விஜயா வின்...
பாதாள பைரவி
தமிழ்...
Direction
K.V. REDDI, B.Sc (HONS)
Produced by- NAGI REDDI.. CHAKRAPANI...

இந்தியாவின் தலைசிறந்த பட்டணம் பொடி

காலையில் எழுந்தவுடன் சுறுசுறுப்புடனிருக்க
ஒரு சிட்டிக்கை

உடல் சுத்தி செய்து உண்டி அருந்தி உறுதியுடன்
உழைப்பிலிறங்க ஒரு சிட்டிக்கை

பகல் போஜனத்திற்குப்பின் பரவசமடைய
ஒரு சிட்டிக்கை

மனோகரமான மாலை வேளையில் மனநிம்மதியுட
னிருக்க ஒரு சிட்டிக்கை

பெண்டு பிள்ளைகளுடன் உண்டு களித்து
உறங்கப்போகுமுன் ஒரு சிட்டிக்கை

REGD. TRADE MARK

T.A.S. ரத்தினம் பட்டணம் பொடி

T.A.S. ரத்தினம் பிரதர்ஸ், தபால் பெட்டி 1151, வண்ணாரப் பேட்டை, மதராஸ்.

OFFICE OF THE ... MADRAS

"நான் பிரஸிடெண்ட் வெஜிடெபிள் ஹேர் ஆயிலே உபயோகித்திருக்கிறேன். அது கேசத்திற்கும் ஆரோக்கியம் அளிக்கும் ஒரு சிறந்த கூந்தல் தைலம் என அனுபவத்தில் கண்டேன். நல்ல கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவுவதுடன் தேகத்திற்குக் குளுமையையும் அளிக்கிறது."

PRESIDENT VEGETABLE HAIR OIL

RATHOD TRADING Co
SOWCARPET - MADRAS. I

Phone : 2884

இலங்கைக்கும், மலாய் நாட்டிற்கும் விற்பனை ஏஜண்டுகள் தேவை.

இனும்



எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும், வளரச் செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 2—4—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—15—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சும்; மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனும். அங்கீகரிக்காமல் போனல் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (G. M.)
JULLUNDUR CITY.

ரூ. 1000 ரொக்க இனாம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லாவிதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாய ஜால மோதிரத்தை' வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் தக்ஷணமே வசியமாய் விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சை கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடுபேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும், லாட்டரி, ஆட்டப்பந்தயம், சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜெயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள், பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

துஷ்ட'கிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் விலகும். நல்லதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாகவும் சந்தோஷமாகவும் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3-0-0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3-15-0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம்மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படிப் பலன் இல்லையென்றால் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

விவரங்களுக்கு எழுதவும்:

Principal,

The Bengal Mesmerism House (G.M.)

JULLUNDUR CITY.

ஸ்தாபிதம் 1920

உலகமெங்கும் புகழ் பெற்றது. பல எக்ஸிபிஷன்களில் மெடல்கள் பரிசு பெற்றது.

P.V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF

தந்தி: நஸ்யம் மதருஸ்

நெ. 1 எக்ஸ்டரு ஸ்பெஷல் பட்டணம் பொடி ஒரு தோலா டின்களிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி

& *R. S.* சுகந்த மூக்குத்தூள் பாக்டரி

அரக்கோணம் & மதருஸ்.

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

காம சாஸ்திரம்

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்-பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிஜ போட்டோ படங்கள்; தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் தூய்ப்பதுமானவை. இப்புத்தகம் நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களையெல்லாம் வெளிப்படுத்துகிறது. கல்யாணம் ஆகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2-12-0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5-0-0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

விலாஸம்:

M/S FRENCH PHOTO SUPPLY COMPANY (G.M.)

JULLUNDUR CITY.

பிரிய சகோதரிகளே!

நான் ஒரு நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஒரு குடித்தனப்பெண், எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது; இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி:

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத் தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

BIBI CHARAN PIARI

SANT NAGAR :: (G. M.) JULLUNDUR CITY.

ஒரு வரம் கோருக!

இனி நீங்கள் சிறிதும் ஏமாற்றமடைய வேண்டியதில்லை. பெரு முயற்சியால் தயாரிக்கப்பட்ட "வசிகரன் கைக்குட்டை" மூலம் நீங்கள் விரும்பிய பெண் கிடைக்கக்கூடும். சிரிப்பு தவழும் குழந்தைகள் உங்கள் மடியில் கொஞ்சலாம். கடின சித்தம் படைத்தவர்கள்கூட உங்கள் காலடியில் விழுவர். உங்களுடைய சக்திவாய்ந்த ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டு நிற்பர். வேலை கிடைப்பது இனி கனவாக இருக்காது. மலடியாக இருக்கும் மனைவிக்குக்கூட குழந்தைகள் பிறக்கும். இறந்தவர்களின் ஆத்மாவுடன் தொடர்பு ஏற்படும். உங்களுடைய மூதாதையர்களின் புதையல்கள் எங்கிருக்கின்றனவென்பது உங்களுக்கு கனவில் அறிவிக்கப்படும். கோர்ட் தாவாக்களில் வெற்றி, லாட்டரியிலும், பேரம், ஹேஷ்யங்களிலும் வெற்றிமேல் வெற்றி. பரீட்சையில் சுலபமாக தேர்ச்சி பெறுவீர்கள். தொழிலில் லாபம் கிட்டும். உங்களுடைய துரதிஷ்டங்கள் நீங்கிவிடும். அதிர்ஷ்டம் உங்களுக்கு பாதசேவை செய்யும். சுருங்கக்கூறுமிடத்து உங்களுடைய விருப்பங்கள் அனைத்தும் பூர்த்தியாகிவிடும். உத்திரவாதம்: உங்கள் மனம் விரும்பியதை நீங்கள் அடையாவிடில் கைக்குட்டையை 6 மாதங்களுக்குள் திருப்பிக் கொடுத்துவிடலாம். வசிகரன் கைக்குட்டை நெ. 1, ரூ. 1-15-0. விசேஷ சக்தி வாய்ந்த கைக்குட்டை ரூ. 3-15-0. 24-மணி நேரத்திற்குள் இதன் மகிமையைக் காணலாம். நமது "வசிகரன்" கைக்குட்டையால் இக்கலியுகத்தில் இந்த ஸ்வாமி உண்மையை ஸ்தாபிக்கிறார். இதன் உதவியால் கணக்கற்றவர்கள் தங்களுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளனர். இந்த அரிய தருணத்தை தயவுசெய்து இழக்காதீர்கள்.

SHREE MAHABIR SWAMY (G. M.) KARTARPUR, E. P.

1951ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1951ற்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன் கூட்டிஅறிய விரும்பினால், ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம். தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூர தேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினாலும் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்). தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Pt. Dev Dutt Shastri Raj Jyotishi (G.M.)

KARTARPUR, PB.

குண்டூசி

தென்னிந்தியாவிலேயே நிகரற்ற
விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

பட்டை 4
ஊசி - 4
பிரதி 40

பம்பாய் ஆதிக்கம்

இந்தியாவில் சினிமாத் தொழில் ஆரம்பமானது முதல் சமீப காலம் வரையில் பம்பாய் மாஹாணம் மற்ற மாஹாணங்கள்மீது ஆதிக்கம் செலுத்தி வந்தது. இடையில் அதனுடன் வங்காளம், பஞ்சாப், ஆகிய மாஹாணங்கள் போட்டி போட்டன. ஆனால் பம்பாய் மாஹாணப் படத்தொழிலினர் என்னென்னவோ சூழ்ச்சி செய்து இவ்விரு மாஹாணங்களிலும் படத் தொழில் ஓங்காதபடிச் செய்துவிட்டனர்.

நிம்மதியாக நடந்துவந்த பம்பாய் படஉலகை "சந்திரலேகா" கலகலக்கச் செய்துவிட்டது. முதலாவதாக ஸ்ரீ. வாஸனின் உன்னத விளம்பரத் திட்டமே பம்பாய் முதலாளிகளை திகைக்க வைத்துவிட்டது. படத்திற்கு ஏற்பட்ட வசூலோ அவர்களைக் கலங்கச் செய்துவிட்டது. இதுவரை தாங்கள் தென்னிந்தியாவைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த காலம் மாறி, தென்னிந்தியர்கள் அகில இந்தியப் பட மார்க்கெட்டில் தங்களுக்குப் போட்டியாய் வந்து விட்டனரே என்று பொறாமை கொண்டனர்.

"சந்திரலேகா" விளம்பரங்கள் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக வெளிவந்தன அல்லவா! இதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, "குறிப்பிட்ட ஓர் அளவுக்கு மேல் பட விளம்பரங்களைப் பத்திரிகைகளில் வெளியிடக் கூடாது" என்ற முட்டாள்தனமான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி தங்கள் வயிற்றெரிச்சலை வெளிப்படுத்தினர். இது யானையை விரட்ட சுண்டைக்காயை எறிந்த மாதிரியாகி விட்டது. "நிஷான்" படத்திற்கும் பத்திரிகைகளில் நிறைய விளம்பரம் செய்து, ஏராளமான வசூலைப் பெற்றார் வாஸன்.

தம் சூழ்ச்சி பலிக்காமல் போகவே பம்பாய் பட முதலாளிகள் ஸ்ரீ. வாஸனை வேறு ஒரு புது வழியில் மடக்கி விட்டனர். "மங்களா" படத்தை ஸ்ரீ. வாஸன் சில தினங்களுக்கு முன் பம்பாயில் வெளியிட தடபுடலாய் விளம்பரம் செய்து வந்தார். இந்தியாவிலேயே பம்பாய் மாஹாணம் ஒன்றில்தான் 11,000 அடி நீளக் கட்டுப்பாடு அமுலில் உள்ளது. "மங்களா" படம் 15,000 அடி நீளத்திற்கு மேற்பட்ட படம் என்பதை அவர்கள் முன்னதாகவே தெரிந்துகொண்டு, பம்பாய் போலீஸ் மந்திரி ஸ்ரீ. மொரார்ஜி தேசாயிடம் தூது சென்று, நீளக் கட்டுப்பாட்டை இதர மாஹாணப் படங்கள் மீதும் பிரயோகிக்க வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டனர். இதையொட்டி, ஸ்ரீ. மொரார்ஜி (15,700 அடி நீளமுள்ள) "மங்களா"விற்குத் தடை விதித்திருக்கிறார் 1949 செப்டம்பர் மாதம் 15ந்தேதிக்கு முன்பே ஆரம்பித்துவிட்ட படங்களுக்கு இந்தவிதி விலக்களிக்கிறது. ஆனால் "மங்களா" படமோ 1948ம் வருஷத்திலேயே ஆரம்பிக்கப்பட்ட படமென்று ஸ்ரீ. வாஸன் எடுத்துச் சொல்லியும் பயனில்லையாம். எனவே, "பம்பாய் சர்க்கார் செய்தது சட்ட விரோதம்" என்று அவர்கள் மீது ஸ்ரீ. வாஸன் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

வட இந்தியரைவிட தென்னிந்தியர்கள் நல்ல படங்களைத் தயாரிக்க முடியும் என்பது நிரூபணம் ஆகிவிட்டது. இனி வடநாட்டாரின் பூச்சாண்டிகளுக்கும், இடையூறுகளுக்கும் நம்மவர் பயப்படப் போவதில்லை. இன்னும் சில பட முதலாளிகள் ஹிந்திப் படங்களைத் தயாரித்து வடக்கே அனுப்பத்தான் போகிறார்கள். பம்பாய் பட முதலாளிகள்—வீண் சூழ்ச்சிகளில் ஈடுபடாமல் நல்ல படங்களைத் தயாரிப்பதற்கு முயலுவார்களாக.

இது செய்தி

இசை விழாக்கள்

சென்னை இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டியின் 18வது வருஷ தென்னிந்திய சங்கீத மஹாநாடும், இசை விழாவும் சென்ற மாதம் 23ம் தேதி ஆரம்பமாயின. கோகலே ஹாலில் மஹாநாடு ஸ்ரீ. பாபநாசம் சிவன் தலைமையில் ஆரம்பமாயிற்று. மஹாநாட்டை ஸ்ரீமதி ருக்மிணி தேவி ஆரம்பித்து வைத்தார். மஹாநாட்டைத் தொடர்ந்து சில இன்னிசைக் கச்சேரிகளும், பல நடனக் கச்சேரிகளும் நடைபெற்றன.

அதே தினம் சென்னை செயின்ட் மேரீஸ் ஹாலில் 8வது தமிழிசை மஹாநாடும், இசைத் திருவிழாவும் ஆரம்பமாயின. இந்த மஹாநாட்டை சென்னை முதல் மந்திரி கனம் பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா ஆரம்பித்து வைத்தார். சுத்தானந்தபாரதியார் மஹாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவினரால் நடத்தப் பெறும் இரண்டாவது பண் ஆராய்ச்சிக் கூட்டம் சென்ற மாதம் 27, 28, 29 ஆக மூன்று நாட்கள் நடைபெற்றன. கூட்டத்தை திருப்புகழ்மணி ஸ்ரீ. டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் தொடங்கி வைக்க, பேராசிரியர் ஸ்ரீ. பி. சாம்பமூர்த்தி தலைமை வகித்தார்.

தொழிலாளர் மஹாநாடு

சென்ற மாதம் 24ம் தேதி தமிழ் நாடு சினிமா, ஸடுடியோ தொழிலாளர் சங்கத்தின் முதல் ஆண்டு மஹாநாடு நடைபெற்றது. நியூடோன் ஸடுடியோவில் நடைபெற்ற இந்த மஹாநாட்டை மந்திரி கனம் சீதாராம ரெட்டி ஆரம்பித்து வைத்தார். மஹாநாட்டுக்கு ஸ்ரீ. கே காமராஜ் நாடார் தலைமை வகித்தார். சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் உபதலைவர் கொடியை ஏற்றிவைத்தார்.

பிற்பகலில் நடைபெற்ற மஹாநாட்டுக்கு ஸ்ரீ. ஸி. உமாபதி தலைமைவகித்தார். அப்பொழுது நிறைவேற்றப்பட்ட 21 தீர்மானங்களில் சில வருமாறு:

சங்கத்தின் பெயரைசென்னைமாஹாண சினிமா ஸ்டுடியோ, ஊழியர்கள் சங்கம் என்று மாற்றுவது. சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ள பிரமுகர்களைக் குறித்து அவதூறாக எழுதும் பத்திரிகைகள்மீது சர்க்கார் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். வட இந்தியாவின் பிரதான நகரங்களிலெல்லாம் தமிழ் நாட்டுப் படங்களுக்கென நம் சொந்தமான தியேட்டர்களைக் கட்ட தனவந்தர்கள் முன் வரவேண்டும்.

வருந்துகிறோம்

பல தமிழ்ப் படங்களில் நடித்துள்ள பி. ஜி. வெங்கடேசன் தமது நாற்பதாவது வயதில் சென்ற மாதம் 24-ம் தேதி சேலத்தில் மாரடைப்பினால் காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். 'தென்னிந்திய சைகால்' என்று அவர் ஒரு சமயம் ரஸிகர்களின் மிகுந்த பாராட்டுதலுக்கு ஆளாகி யிருந்தார்.

அரங்கேற்றங்கள்

சென்ற மாதம் 18ம் தேதி பேபி ஜீவரத்னமாலாவின் பரத நாட்டிய அரங்கேற்றம், சென்னை ரஸிக ரஞ்சனி சபாவில் நடைபெற்றது. இந்த பேபி பந்தநல்லூர் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையிடம் சிக்ஷை பெற்றவர். ஸ்ரீ. ஈ. கிருஷ்ணய்யர் பேபியின் திறமையைப் பாராட்டிப் பேசினார்.

ராஜபாளையம் ரஸிகர்கள் சங்கம்

ராஜபாளையத்திலுள்ள சினிமா ரஸிகர்கள் ஒன்று கூடி சினிமா ரஸிகர்கள் சங்கம் ஒன்றை சென்ற மாதம் 24ம் தேதி ஆரம்பித்தார்கள். அன்று சங்கத்திற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தியன் ஆர்ட் ஸிண்டிகேட்

பம்பாயில், இந்தியன் ஆர்ட் ஸிண்டிகேட் என்ற புது ஸ்தாபனம் ஆரம்பமாகியுள்ளது. இந்த ஸ்தாபனத்தார் வட இந்திய, தென் இந்திய நாட்டியமணிகளைக் கொண்டு 'கதம்ப நிகழ்ச்சி'களை நடத்துவார்களாம்.

பருக்களைப் போக்கி முகத்திற்கு
வசீகரத்தை அளிப்பது

பிரபாத் ஸ்னோ

PRABHAT
(REGD.)
SNOW

For Beauty
& Complexion

TRADE MARK

PRABHAT TOILET WORKS
NO.1 NAGAMONY GARDEN STREET, MADRAS-1



முன்னேற்றமடைந்த பால்பேரிங் மாவு மில்கள், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காப்பி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும், அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில், எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப்படுகின்றன ! மற்றும் பெல்ட்டிங்குகள், பேரிங்குகள், முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எங்களிடம் எப்போதும் கிடைக்கும்.

கே. சுவாமிநாதன்
அண்டு கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள் :

பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
நெ. 22, சில்வர்ஜூபிளி பார்க் ரோட், பெங்களூர் சிடி

தொழிற்சாலை : 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

சூர்ய பிர

ஜெமினியின் "மிஸ் மாலினி" படம் வெளியிடப்பட்டதும் சினிமா ரஸிகர்களின் மனதில் ஒரு "சந்தேகம்" தோன்றலாயிற்று. "மாலினியில் பிரபல புஷ்பவல்லியின் ஜாடையை உடைய ஒரு நடிகை நடிக்கிருரே அவர் யார்?" என்று பல ரஸிகர்கள் என்னிடம் கேட்டனர். துணிபுமிகுந்த வேறு சில வாசகர்கள், "புஷ்பவல்லிக்கும், சூர்ய பிரபாவுக்கும் முகத் தோற்றம் ஒன்ருயிருக்கிறதே. இருவரும் உடன் பிறந்த சகோதரிகளா?" என்று கூடக் கேட்டு விட்டார்கள். சினிமா ரஸிகர்கள் நக்ஷத்திரங்களைப் பற்றி யூகிக்கும் விஷயங்களில் பெரும்பாலானவை தவருகவே முடிவதுவழக்கம். ஆனல் சூர்ய பிரபாவின் விஷயத்தில் அவர்களுடைய யூகம் சரியாகவே முடிந்திருக்கிறது. புஷ்பவல்லியும் சூர்ய பிரபாவும் ஒரே தாயின் இரு புத்திரிகள்தாம்.

உண்மையைச் சொல்லப் போனல் முக ஜாடை ஒன்ருய் இருக்கும் காரணத்தி



மேலே;
சூர்யபிரபாவின் அசல் தோற்றம்.

வலது புறம்:
"சக்ரதாரி"யில் கோராகும்பரின் இளைய மனைவியாக காட்சி யளிக்கிருர்.

பா வாழ்க்கை வர்ணனை

னால்தான் சூர்ய பிரபாவும் சினிமா நடிகை ஆனார். "மாலினி" படத்தில் டைரெக்டரின் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல் மாலினி நடக்கிறாள். ஒரு நாள் நாடகத்திற்கும் வரவில்லை. எனவே, டைரெக்டர் மிக கோபம் அடைந்து, மாலினியின் தோற்றம் உள்ள இன்னொரு நடிகையை மாலினியின் பாகத்தில் நடிக்கச் செய்து, அன்றைய நாடகத்தை முடித்து விடுகிறார். இந்தக் கட்டம் "மாலினி" படத்தில் வருகிறதல்லவா? இந்தக் காட்சியில் நடிப்பதற்கென மாலினியாக நடிக்கும் புஷ்பவல்லி

"சக்ர தாரி" யில் சகோதரிகளான புஷ்பவல்லியும் சூர்யப்பிரபாவும் சகோதரிகளாகவே நடிக்கின்றனர் . . . .

யின் தோற்றமுள்ள இன்னொரு நடிகையைத் தேர்ந்தெடுக்க முயன்று வந்தார் பிரபல கேமிராமென்—டைரெக்டர் ராம்நாத். ஜெமினி

ஸ்டுடியோவின் 'நடிக நடிகை பதிவு இலாகா'விலிருந்து கட்டுக் கட்டாய் போட்டோக்கள் வந்து குவிந்தன. ஆனால், அவற்றுள் ராம்நாத்திற்கு திருப்தி அளிக்கக்கூடிய ஒரு போட்டோகூடக் கிடைக்கவில்லை. ராம்நாத் மனம் குன்றிப் போனார். வேறு என்ன செய்வது என்றும் அவருக்குத் தோன்றவில்லை. இந்தக் "காட்சியை வேறு விதமாய் மாற்றி விடலாமா?" என்றுகூட அவர் எண்ணமிட்டு வந்தாராம், ஆனால் அன்றைய சாயங்திரமே அவரது கவலை நீங்கிவிட்டது.

புஷ்பவல்லி தம் பாகத்தை நடிப்பதற்காக அன்று சாயங்காலம் ஸ்டுடியோவிற்கு வந்தார். அன்று சூர்ய பிரபாவும் அவருடன்கூட 'ஷூட்டிங்' பார்ப்பதற்காக ஸ்டுடியோவுக்கு வந்தார். சூர்ய பிரபாவைப் பார்த்ததும் அவரையே மேலே சொன்ன பாத்திரத்திற்கு அமர்த்திக் கொண்டு விடுவது என்று தீர்மானித்துக் கொண்டார் ராம்நாத். தம்முடைய விருப்பத்தை புஷ்பவல்லியிடமும் தெரிவித்தார். இதற்கு இணங்கி தங்கை சூர்ய பிரபா சினிமாவில் நடிப்பதற்கு அநுமதி கொடுத்தார் புஷ்பவல்லி. சூர்ய பிரபா நடித்த முதல் படம் "மிஸ் மாலினி" தான் என்றாலும், அப் படத்தில் அவரது நடிப்பு பாராட்டத் தக்கபடி அமைந்திருந்தது. இதற்கு முக்கிய காரணமாய், சூர்ய பிரபா புஷ்பவல்லியின் தங்கையாய் பிறந்திருப்பதைத் தான் கூறவேண்டும். குடும்பத்தில் மூத்த பெண் அல்லது பிள்ளை எதைச் செய்கிறதோ அதையே இளைய பெண்களும், பிள்ளைகளும் சகஜமாய் பின்பற்றுவதை நம் வீடுகளிலேயே காண்கிறோம். எனவே, தமக்கை புஷ்பவல்லி ஆடவும், பாடவும், நடிக்கவும் செய்ததை தங்கை சூர்ய பிரபா சிறு வயதிலிருந்தே பின்பற்றியது ஆச்சரியமில்லையே.

புஷ்பவல்லியின் சிறு பிராயத்திலேயே அவரது தகப்பனர்



பிரதிபாவின்
லக்ஷ்மம்மா
கதா



இறந்துவிட்டதனுல் அவர் தாயாரும், தங்கையும் அவருடைய சம்பாத்தியத்தில், அவருடன் கூடவே வசிக்கலானுர்கள். புஷ்பவல்லி படங்களில் நடிக்கப் போனபோதெல்லாம் இவர்களும் அவருடன் கூடவே சென்று வந்தனர். ஸ்டுடியோவில் அக்கா நடித்து வந்ததையெல்லாம் சூர்ய பிரபா வீட்டில் நடித்துப் பார்த்து வந்தார்.

பானுமதி, ரஞ்சன, சூர்யபிரபா (நிஷான்)

1938–ம் வருஷத்தில் புஷ்பவல்லி கல்கத்தாவில் தம் மூன்ருவது படமான "மோஹினி பஸ்மாஸுரா"வில் நடித்து வந்தார். இப்படத்தில் மோஹினி பஸ்மாஸுரனை மயக்குவதற்காக நடனம் ஆடுகிருள். இக்காட்சியில் நடனம் ஆடவேண்டிய அவசியம் ஏற்படவே, புஷ்பவல்லி அப்படத்தின் நடன டைரெக்டராயிருந்த—காலஞ்சென்ற—போலோநாத்தினிடம் நடனப் பயிற்சி பெறலானுர். அப்போது ஒன்பது வயதே ஆகியிருந்த சூர்ய பிரபாவுக்கு தானும் நடனம் பயில வேண்டும்



மங்களா (ஹிந்தி, தெலுங்கு)

என்ற துடிதுடிப்பு ஏற்பட்டது. அதன் விளைவாய் போலோநாத்தினிடமே இவரும் நடனப் பயிற்சி பெற ஏற்பாடு செய்யப்பட்டது.

புஷ்பவல்லி கல்கத்தாவில் படங்களில் நடித்து விட்டு சென்னைக்கு வந்து சேர்ந்ததும், சூர்ய பிரபா ஆந்திர மஹில சபாவில் சேர்ந்து, சாம்ராஜ்யம் என்ற நடன ஆசிரியையிடம் பயிற்சி பெற்றார். பின்னர் குச்சிபூடி வேதாந்தம் லக்ஷ்மி நாராயண சாஸ்திரியினிடமும் கொஞ்ச காலம் கற்றுக் கொண்டார். அந்த சமயத்தில் சூர்ய பிரபாவுக்கு பரத நாட்டியம் ஆடவும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவா ஏற்பட்டது. குமாரி ருக்மணியின் குருவான காஞ்சிவரம் எல்லப்ப நட்டுவனார் அவருக்கு நடன குருவாக அமைந்தார். நடனத்தில் இவ்வளவு பயிற்சி பெற்றிருந்தபோதிலும் அவர் மேடைமீது தோன்றி நடனம் ஆட முயற்சிக்கவில்லை. சினிமாவுக்கு ஏற்ற முக அழகும், நடிப்புத் திறமையும் பெற்றிருந்தும் — தன் சகோதரியே ஒரு சினிமா நடிகையாய் இருந்தும்கூட—சூர்ய பிரபா சினிமாவில் நடிப்பதற்கு முயலவில்லை. ஆனால், அந்த சந்தர்ப்பம் அவரைத் தேடி வந்தபோது அவர் உதறித் தள்ளி விடாது அதைச் சரியாகப் பற்றிக் கொண்டார். அவருக்கிருந்த திறமைகளை ராம்நாத்தும் திறன்மிக்க மேற்பார்வையின் மூலம் "மிஸ் மாலினி"யில் நன்கு சோபிக்கும்படிச் செய்திருக்கிறார்.

"மிஸ் மாலினி"க்குப் பிறகு புஷ்ப



வல்லியும், சூர்ய பிரபாவும் "சக்ர தாரி" படத்தில் சகோதரிகளாகவே நடித்தனர். இந்தப் படத்தின் மூலம் சூர்ய பிரபா "மிஸ் மாலினி"யைவிட அதிகப் புகழைப் பெற்றார். அவரது நடிப்புத் திறமையையும் ரஸிகர்கள் நன்கு தெரிந்துகொள்ள முடிந்தது.

பல வருஷ காலமாக பானுமதியும் ராஜ குமாரியும் பல படங்களில் நடித்து விட்டு, சமீபத்தில் "சந்திர லேகா" மூலமும், "நிஷான்" மூலமுமே அகில இந்திய நக்ஷத்திரங்கள் ஆனார்கள். ஆனால் சூர்ய பிரபாவுக்கோ மிகப் பெருமைப் படத் தக்க இந்த பாக்கியம் அவரது மூன்றுவது படத்திலேயே ஏற்பட்டு விட்டது. "அபூர்வ சகோதரர்கள்" (தமிழ்), "அபூர்வ சோதரலு" (தெலுங்கு), "நிஷான்" (ஹிந்தி), ஆகிய மூன்று படங்களிலும் சூர்ய பிரபா நடித்திருக்கிறார். இம் மூன்றும் ஜெமினியால் தயாரிக்கப்பட்ட ஒரே கதைப் படம் என்பது நேயர்களுக்குத் தெரியும். மூன்று பாஷைப் படங்களிலும் சூர்ய பிரபாவே சம்பாஷணைகளைப் பேசி நடித்திருப்பது குறிப்பிடத் தக்கது. இந்த பாக்கியமெல்லாம் சூர்ய பிரபாவுக்கு ஏக காலத்தில் ஏற்பட்டனவென்றாலும், அவருக்கு இப் படங்களில் சாதாரணமான ஒரு சிறிய பாத்திரமே அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் தம் வரையில் அவர் அப்பாத்திரத்தை பொருத்தமாகவே நடித்திருந்தார்.

ஜெமினியின் மூன்று படங்களில் நடித்த பின்னர் சூர்ய பிரபா இதர கம்பெனிகளின் படங்களிலும் நடிக்க முற்பட்டார். பிரதிபா பிக்சர்ஸார் தயாரித்து வெளியிட்டிருக்கும் "ஸ்ரீ லக்ஷ்மம்மா கதா" என்ற தெலுங்குப் படத்தில்—அதற்குமுன் தாம் நடித்த வேஷங்களுக்கு முற்றிலும் மாறுக—தேவதாஸியாகத் தோன்றியிருக்கிறார் சூர்ய பிரபா. இப் படத்தில் அவர் நடனமும் ஆடியிருக்கிறார்.

சோபனுசலா பிக்சர்ஸார் தற்போது "திலோத்தமா" என்ற தெலுங்குப் படத்தைத் தயாரித்து வருகின்றனர். இதே படத்தை அவர்கள் "மாயமாலை" என்ற பெயருடன் மொழிபெயர்த்து வருகிறார்கள். இவ்விரண்டிலும் சூர்ய பிரபாவே நடித்துப் பேசியிருக்கிறார்.

"மங்கம்மா சபதம்" படத்தை ஜெமினி "மங்களா" என்ற பெயருடன் தெலுங்கிலும், ஹிந்தியிலும் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த "மங்களா" படங்களில் (தமிழ் படத்தில் டி. ஏ. மதுரம் நடித்திருக்கும் அதே பாத்திரத்தை) சூர்ய பிரபா

[தொடர்ச்சி 65-ம் பக்கத்தில்]

வஞ்சம் தீர்ந்தது

"ராதா"

சாயங்காலம் ஆபீஸிலிருந்து திரும்பி வந்ததும் சட்டையைக் கழட்டிக் கொண்டிருந்தேன். "அம்மா, 'இவரை' மத்தியானம் யாரோ வந்து தேடி விட்டுப் போனாரே சொன்னீர்களா!" என்று ஞாபகப்படுத்தினாள் என் மனைவி. "ஆமாம்" என்று அலுத்துக்கொண்டே அங்கு வந்த என் தாயார், "ராதா, மத்தியானம் மூன்று மணி இருக்கும். யாரோ ஒருவன், பார்த்தால் பைத்தியம் மாதிரி இருந்தது, உன்னை வந்து தேடிவிட்டுப் போனான்" என்றாள்.

எனக்கு அது யாரா யிருக்குமென்று சட்டென்று பிடிபடவில்லை. "அம்மா, ஆள் எப்படி யிருந்தான்?" என்று கேட்டேன்.

"நடுத்தர வயதிருக்கும். அவன் இருந்த கோலத்தைப் பார்த்த எனக்கு அவன் பைத்தியமாகவோ, பிச்சைக்காரனாகவோ இருக்கணும்னு தோணித்து. நாளைக் காலையில் வந்து பார்ப்பதாகச் சொல்லி விட்டுப் போனான்."

"சரி, எவனோ யாசகத்துக்குத்தான் வந்திருக்க வேண்டும்" என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டேன்.

* * *

மறுநாள், ஞாயிற்றுக்கிழமை. எனக்கு விடுமுறை நாள் காலை எட்டு மணிக்கு அந்த வார 'ரேஷனை' வாங்கிக்கொண்டு வரலாமெனக் கிளம்பினேன். வாசலில், முன் தினம் என்னை வந்து தேடிவிட்டுப் போனதாகச் சொன்ன அந்த ஆசாமி எதிர்ப்பட்டான். கந்தைத் துணிகளால் மூடப்பட்டிருந்த போதிலும் அவன் சதைப் பற்றற்ற தேகம் நன்றாகத் தெரிந்தது. எண்ணெயைக் கண்டு பல காலமான சிக்குப் பிடித்த தலை மயிர், முகத்தை கோரமாக்கிக்கொண்டு அடர்ந்து வளர்ந்த தாடி மீசை. அந்த ஆசாமி, "நான் நேற்று இங்கு வந்திருந்தேன்" என்று ஆரம்பித்தான்.

நான் இடைமறித்து, "ஆமாம், சொன்னார்கள். நீங்கள் யார்? என்ன விஷயமாக வந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"ராதா!..." என்று அவன் என்னைப் பெயர் சொல்லி அழைத்தபோது நான் ஆச்சரியத்தினால் திடுக்கிட்டேன். அக்குரலில்தான் எவ்வளவு கனிவு, அன்பு.

அவன் தொடர்ந்து பேசினான்: "நீ என்னை இந்த நிலையில் கண்டு கொள்ளாததற்கு நான் ஆச்சரியப்படவில்லை. ஏன், என் தாயார்—உன் மாமி—அவள்கூட என்னை இந்த நிலையில் புரிந்து கொள்வது கஷ்டம்தான்."

என்னைத் தூக்கிவாரிப்போட்டது. என் முன் பிச்சைக்காரனைப்போன்ற அலங்கோலத்துடன் நின்றவன் என் மாமா பிள்ளை ரகுநாதன் என்று அறிந்தபோது என் உடம்பை என்னவோ செய்தது. ரகுநாதனை நான் பார்த்து எட்டு வருஷங்கள் ஆகியிருந்தன. எட்டு வருஷங்களுக்கு முன் திடகாத்திரமாக, அழகாக இருந்த ரகுநாதனை உருவகப்படுத்திப் பார்த்தேன். அந்த ரகு எங்கே, இந்த ரகு எங்கே! என் கண்களில் நீர் துளிர்த்தது கையைப் பிடித்து அவனை உள்ளே அழைத்துப் போனேன். அம்மா அவனைக் கட்டிக் கொண்டு கதறினாள். நான் அவனை என் தாயாரிடம் பேசும்படி விட்டுவிட்டு, 'ரேஷன்' கடையை நோக்கிப் புறப்பட்டேன்.

* * *

என் அகக்கண் முன் ஒரு திரை விழுந்தது. எட்டு வருஷங்களுக்கு முந்திய சம்பவங்கள் அதிலே ஓட ஆரம்பித்தன. நானும், ரகுவும் திருச்சியில் காலேஜில் படித்து வந்தோம். ரகு படிப்பில் என்னை விட கெட்டிக்காரன் ஆளும் நல்ல அழகன். எங்கள் படிப்பு முடிந்ததும் நான்



வேலை தேடி சென்னைக்கு வந்துவிட்டேன். ரகுநாதன் தன் கிராமமான ஆங்கரைக்குப் போய் விட்டான். நாங்கள் பிரிந்த பிறகு தவறாமல் ஒருவருக்கொருவர் கடிதம் எழுதி வந்தோம். ஆறு மாதங்களுக்குப் பிறகு ரகுநாதனிடமிருந்து எனக்குக் கடிதம் வருவது நின்றுவிட்டது. பிறகு ஒரு நாள், கிராமத்திலிருந்த அவன் தாயிடமிருந்து—என் மாமியிடமிருந்து—எனக்கு ஒருகடிதம் வந்தது. தான் மிகவும் நோய் வாய்ப்பட்டிருப்பதாகவும், தான் கண்ணை மூடுவதற்கு முன் என்னிடம் சில முக்கியமான விஷயங்களைக் கூற விரும்புவதாகவும், என்னை ஒரு நடை வந்து போகும்படியும் அவள்] அதில் எழுதியிருந்தாள்.

நான் ஒரு வாரம் 'ரஜா' வாங்கிக்கொண்டு என் மாமியைப் பார்த்துவிட்டு வர ஆங்கரை கிராமத்திற்குப் போனேன். வீட்டிற்குள் நுழையும்போதே எனக்கு என்னவோ போலிருந்தது. என் மாமி, கடிதத்திலே எழுதியிருந்ததையும்விட மோசமாக இருந்தாள். நான் என் மாமியைக் கேட்ட முதல் கேள்வி, "ரகு எங்கே?" என்பதுதான்.

அடுத்த விநாடியே, 'என்டாப்பா அந்தக் கேள்வியைக் கேட்டோம்' என்று நான் வருத்தப்படும்படி ஆகிவிட்டது. மாமியின் கண்களிலிருந்து கண்ணீர் சரசர வென்று சுரந்தது. துக்கம் தொண்டையை அடைக்க தட்டுத் தடுமாறி அவள் பேசலானாள்.

"ராதா, எனக்கு ரகு வேறு, நீ வேறு இல்லை. உன்னிடம் நான் என் ஒளிக்க வேண்டும். ரகு இந்த ஊரை விட்டு ஓடிப்போய் இன்றோடு பதினைந்து நாளாகிவிட்டன. உன் மாமா வைத்து விட்டுப்போயிருக்கும் சொத்து இரண்டு தலைமுறைகளுக்குப் போதும். அதை வைத்துக்கொண்டு, மானமாக சௌகரியமாகப் பிழைக்கக் கூடாதா? கிராமத்தார் சிரிக்கக் காரியம் பண்ணிவிட்டுப் போய்விட்டான். என்னால் வெளியில் தலைகாட்ட முடியவில்லை." இதைக் கூறி முடித்ததும் துக்கம் தாளாது வாய்விட்டுக் கதறிஅழுதுவிட்டாள் மாமி.

நான் மாமியை சமாதானப்படுத்தினேன். "மாமி, ரகு புத்திசாலியாச்சே. தப்புத் தண்டா விஷயத்துக்குப் போக மாட்டானே. அப்படி என்ன அசட்டுக் காரியம் பண்ணிவிட்டான், விபரமாகச் சொல்லுங்கள்" என்றேன்.

"என்ன பண்ணினானா? இந்த ஊரில் ஒரு சின்னஞ் சிறுசு, வாழாவெட்டியாக இருந்தது. அதை இழுத்துக்கொண்டு ஊரைவிட்டு ஓடிவிட்டான். வேறு என்ன வேணும் ஊர் சிரிக்க."

"மாமி, ரகு உங்களிடம் எதுவுமே சொல்லவில்லையா!" என்று கேட்டேன்.

"ஓடிப் போவதற்குப் பத்து நாட்களுக்கு முன் ஒரு நாள் என்னிடம் பேச்சோடு பேச்சாக, தான் அந்த வாழாவெட்டியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதாகச் சொன்னான். எனக்கு அசாத்தியமான கோபம் வந்துவிட்டது. 'ஏண்டா கழிசடை உன் புத்தி இப்படிப் போகிறது? குலத்திலே இல்லாமே கோத்திரத்திலே இல்லாமே உனக்கு இந்த எண்ணம் எப்படியடா தோணித்து!'' என்று கோபித்துக் கொண்டேன். பத்து நாளைக்கெல்லாம் திடீரென்று அவனையும் காணோம், அந்த வாழாவெட்டியையும் காணோம். இதோ பார், ராதா! நான் இன்னும் அதிக நாள் உயிரோடு இருக்க மாட்டேன். வம்சத்துக்கே அழியாத ஒரு களங்கத்தை உண்டுபண்ணி விட்ட அந்த நாயின் மூஞ்சியில் நான் இனிமேல் விழிக்கமாட்டேன். எனக்குப் பண்ண வேண்டிய அந்திமக் கிரியைகளையெல்லாம் நீயே பண்ணிவிடு. நான் மனமுடைந்து சாகப் போகிறேன். அதே மாதிரி அவனும் மனம் உடைந்துதான் சாகப் போகிறான் பார்."

என் மாமி ரொம்பவும் மானஸ்தி. தான் பெற்ற மகனுக்கே ஒரு தாய் சாபம் கொடுத்தாளென்றால் அவள் மனம் எவ்வளவு தூரம் புண்பட்டிருக்க வேண்டும்; கசந்து போயிருக்க வேண்டும். நான் ஒரு வாரம் அவளுடன் தங்கி அவள் சற்று ஆறுதலடையும்படி செய்துவிட்டுத் திரும்பினேன். ஆனால், அடுத்த வாரமே நான் ஆங்கரைக்குப் போகவேண்டிய பிரமேயம் ஏற்பட்டுவிட்டது. என் மாமி இந்தப் பாப உலகத்திலிருந்து விடை பெற்றுக் கொண்டு விட்டாள்.

கோர்வையாக இவ்வளவும் என் மனத்திரையில் ஓடி முடிந்த போது என்னிடமிருந்து நீண்ட ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

• • •

ரகுநாதன் அது முதல் என்னுடனேயே தங்கி விட்டான். கிராமத்தை விட்டுக் கிளம்பிய பின் அவன் எங்கே போகவில்லையென்றாலும், தன் தாய் மனம்

ஓடிந்து மரணமடைந்த விஷயத்தை அவன் விசாரித்துத் தெரிந்து கொண்டிருந்தான். நான் அவனை, தாடி, மீசை, இவைகளை எடுத்து விட்டு, நல்ல உடைகள் அணிந்துகொண்டு எல்லோரையும் போல இருக்கும்படி எவ்வளவோ மன்றாடினேன். அவன் ஒரே பிடிவாதமாக மறுத்து விட்டான். "ராதா, ஒரு நல்ல பாம்புக்குப் பால் வார்த்து நான் கெட்டுப் போனேன். என் தாயும் மனம் புண்ணாகி மடியும்படி செய்து விட்டேன். அந்தப் பாம்பைத் தடிகொண்டு தாக்கின. பிறகுதான் சுகவாழ்வு. ." என்று இடைவிடாது கூறி வந்தான். அம்மாதிரி சமயங்களில் அவனுக்கு "சித்த ஸ்வதீனம் இல்லையோ!" என்று கூட நானும் அம்மாவும் சந்தேகப் படுவோம்.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. ரகு வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தான். ஒரு நாள் மாலை நான் பீச்சுக்குக் கிளம்பினேன். ரகு வரமாட்டான் என்று எனக்குத் தெரியும். இருந்தாலும், "வாயேன் பீச் வரையில் போய்விட்டு வருவோம்" என்று ஒப்புக்கு அழைத்தேன். நான் சற்றும் எதிர்பாராத விதமாக அவன் என்னுடன் கிளம்பிவிட்டான்.

பீச்சிலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த போது, பேச்சோடு பேச்சாக நான், "ரகு" என்று மேலே பேசாது தயங்கினேன்.

"ராதா, ஏன் தயங்குகிறாய்? தயங்காமல் கேள். நான் என் அம்மா மனம் புண்ணாகும்படி நடந்து கொண்டேன், என்று கேட்க விரும்புகிறாய், அப்படித் தானே!"

"அது மட்டுமல்ல. நீ கிராமத்தைவிட்டுக் கிளம்பிய பின் இவ்வளவு வருஷங்கள் என்ன செய்தாய்? அந்தப் பெண் என்ன ஆனாள் என்பவைகளை அறிய விரும்புகிறேன்..."

"நானே உன்னிடம் எல்லாவற்றையும் விபரமாகச் சொல்ல வேண்டும் என்றுதான் இருந்தேன். என் தாயார் மஹா உத்தமி. அவள் சாபம் பலிக்கத் தான் போகிறது. நான் மனமுடைந்து மடியும் முன் விஷயத்தை உன்னிடம் சொல்லி விடுகிறேன்.

"காலேஜ் படிப்பு முடிந்ததும் நாம் இருவரும் பிரிந்தோம் அல்லவா? நான்

[தொடர்ச்சி 60ம் பக்கத்தில்]

சமீபத்தில் ஒரு நடிகையின் வீட்டுக்குப் போயிருந்தேன். நடிகை ஏதோ ஒரு பத்திரிகையை வெகு கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் வந்தது கூடத் தெரியாது அவ்வளவு சுவாரஸ்யமாய் படித்துக் கொண்டிருந்தார். நான் "நமஸ்தே" என்று குரல் கொடுத்த பிறகுதான், விழிப்படைந்து என்னை வரவேற்றார். நான் உட்கார்ந்தபடி, "அதென்ன அவ்வளவு சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்தீர்கள்?" என்று கேட்டேன். "ஒன்றுமில்லை ஒரு கதை..." என்று சிரித்து மழுப்பிவிட்டு, பேச்சை வேறு விஷயத்துக்கு மாற்றி விட்டார் நடிகை.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, நடிகை எனக்குக் காப்பி கொண்டு வருவதற்காக வீட்டுக்குள்ளே போனார். தனியே விடப்பட்ட நான், நடிகை வைத்துவிட்டுப் போன அந்தப் பத்திரிகையை எடுத்துப் பார்த்தேன். நடிகை அவ்வளவு ஆர்வத்துடன் எதைப் படித்துக் கொண்டிருந்தார் என்பது தெரிந்தபோது எனக்கு ஆச்சரியமாகவே இல்லை. அவர் படித்தது கதையுமல்ல; கட்டுரையுமல்ல. ஒருவிளம்பரம். "உங்கள் உடல் இளைக்க வேண்டுமா?" என்ற தலைப்புடன் கூடிய ஒரு மருந்தின் விளம்பரம் அது. விளம்பரத்தில் 'சாப்பிடும் முன்' 'சாப்பிட்டபின்' என்ற இரு படங்களும் பிரசுரமாகியிருந்தன. சித்தானைக்குட்டி போன்ற மேற்கூறிய நடிகை அந்த விளம்பரத்தை அவ்வளவு அக்கரையுடன் படித்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது!

* * *

மேற்குறிப்பிட்ட நடிகைக்கு மட்டும் என்ன? நம் நக்ஷத்திரங்களில் பலருக்கு இந்தப் 'பருமன் பிரச்னை' ஓயாத தலைவலியாக இருந்து வருகிறது. அவர்களில் சிலர் நாளுக்கு நாள் ஊதிக் கொண்டே போவதை கவனிக்கும்போது, எங்கே ஒரு நாள் வெடித்துப் போவார்களோ என்று கூட அஞ்ச வேண்டியிருக்கிறது. அவர்கள் ஊதிக்கொண்டே போவதைக்கண்டு ரஸிகர்கள் வெறுப்பது ஒருபுறமிருக்க, அந்த நக்ஷத்திரங்கள் அல்லும் பகலும் அதை எண்ணி அவதிப்படத்தான் செய்கிறார்கள். இந்தக் கவலை நடிகர்களைவிட நடிகைகளையே அதிகம் பாதிக்கிறது. அவர்களும் என்னென்னவோ கஜகர்ணம் போட்டுத்தான் பார்க்கிறார்கள். அவர்கள் தேகம் "இளைப்பேனா?" என்று ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடுகிறது!

* * *

ஆறு அவுன்ஸ் ரேஷனில் நக்ஷத்திரங்களின் 'உடம்பு ஊதும் விதம் எப்படி?' என்று ரஸிகர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். அரிசிக்குத்தான் ரேஷனே தவிர, சதையை வளர்க்கும் சத்துள்ள மற்ற பல பண்டங்கள் ரேஷனில்லாமல் கிடைக்கின்றனவே. அத்துடன் அவர்களுக்குக் கிடைக்கும் வருமானத்திற்கும் ரேஷன் கிடையாதே. கொழுத்த பணம் சம்பாதிக்கும் அவர்கள் கொழு கொழு என்று வளர்கிறார்கள் போலும்! இது இப்படியிருக்க நம் நக்ஷத்திரங்களில் சிலர் தங்கள் சதையைக் குறைக்க என்னென்ன யுக்திகளைக் கையாளுகிறார்கள் என்று பார்க்கலாம்.

* * *

'சிரித்தால் உடல் பருக்கும்' என்று ஹாஸ்யத்தின் சக்தியைக் குறித்துச் சொல்லுகிறார்கள். நம்மையெல்லாம் ஹாஸ்ய நடிப்பால் குலுங்கக் குலுங்க நகைக்கவைக்கும் ஹாஸ்ய நடிகை டி. ஏ. மதுரம் தம்பருமனைக் குறைக்க, தாம் கையாண்ட சில வழிகளை ஒரு பத்திரிகாசிரியருக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார். "ஆறு அவுன்ஸ் எதற்கு? இரண்டு அவுன்ஸ் போதுமே" என்று தம் வயிற்றைக் காயப் போட்டார். போதாதற்கு வாரத்தில் ஒரு நாள் உபவாசம் வேறு அனுஷ்டித்தார். இப்படியெல்லாம் அனுஷ்டித்து வெற்றி காணமலா போய்விடு

போங்கல் தினத்தன்று பல ஊர்களில் வெளிவரப் போகும் ஜூபிடரின் புதுப் படமான "மர்மயோகி"யில் எஸ். ஏ. நடராஜனும் அஞ்சலி தேவியும் தோன்றும் ஒரு ரஸமான காதல் காட்சி.

வார். நம் உணவு மந்திரி கனம் முன்ஷிக்கு இது விஷயம் தெரிந்தால் மதுரத்தை நிச்சயமாகப் பாராட்டிக் கடிதம் எழுதுவதோடு இந்த விஷயத்தை பிரமாதமாய் விளம்பரங்கூடச் செய்திருப்பார்.

* * *

உப பாத்திரங்களிலேயே நடித்து வந்த ஒரு நடிகைக்கு, திடீரென்று, பிரபல ஸ்டுடியோ ஒன்றின் படத்தில் நல்லதொரு பாகத்தில் நடிக்கும் அதிருஷ்டம் கிடைத்தது. அப்படத்தின் மூலம் அவருக்குப் பட உலகில் நல்ல கிராக்கியும் ஏற்பட்டது. பட சம்பந்தப்பட்டவர்களுக்கு நடிகையைப் பொருத்தமட்டில் ஒரே ஒரு குறை உண்டு. நடிகை மட்டும் இரட்டை நாடியாக இல்லாமல் கொஞ்சம் ஒடிய ஒடிய இருந்தால் மேலும் சோபிக்கக் கூடுமேஎன்பதுதான் அது. நடிகைக்கும், தனக்கு 'நல்ல காலம்' வந்திருக்கும் போது இந்த உடம்பு குறுக்கே நின்று அதைக் கெடுத்து விடுமோ?' என்று கவலை ஏற்பட்டது. அது முதல் தம் உடல் இளைக்க அவர் என்னென்னவோ செய்து பார்த்தார். ஆனல் பலன் இல்லை.

ஒரு நாள் காலை பீச் ஓரமாக ஒரு நடிகை குதிரை மீது சவாரி செய்து கொண்டு வருவதைப் பார்த்தேன். தாம் அடுத்தபடி நடிக்கப் போகும் படத்தில் குதிரை சவாரி செய்ய வேண்டிய கட்டங்கள் இருக்கின்றன என்றும், அதற்காகவே தாம் குதிரை சவாரி பழகி வருவதாகவும் அவர் சொன்னர். ஆனல், உண்மைவிஷயம் அது அல்ல. "குதிரை சவாரி செய்தால் உடம்பு இளைக்கும்" என்ற 'ரகஸிய'த்தை யாரோ அவருக்கு உபதேசித்திருந்தார்களாம்!

* * *

'மணலில் ஓடுவது உடம்பின் அநாவசியமான சதையைக் குறைக்கும்' என்பது மற்றொரு முறை. தூக்க முடியாது, தங்கள் தேகத்தைத் தூக்கிக்கொண்டு, பெருமூச்சு வாங்க, காலை வேளைகளில் பீச் மணலில் 'ரேஸ்' ஓடும் சில நக்ஷத்திரங்களையும் நான் பார்த்திருக்கிறேன். ஏன், சில நடிகைகள் தாங்கள் அளிக்கும் பேட்டியில்—தங்கள் நித்தியப்படி வேலைகளில், காலையில் பீச் மணலில் 'வாக்கிங்'

போவதைப்பற்றிக் குறிப்பிடுவது வாசகர்களுக்குத் தெரிந்ததுதானே?

* * *

சில மாதங்களுக்கு முன்பு ஒரு ஹாஸ்ய நடிகையின் வீட்டிற்குப் போயிருந்தேன். இடையில் நான் அவரைப்பார்த்து ஒரு வருஷத்துக்கு மேலாகி யிருந்தது ஹாஸ்ய நடிகை வஞ்சனையில்லாமல் குறுக்கே வளர்ந்திருந்தார்! "ஆள் அடையாளமே தெரியாமல் ஊதி விட்டீரே?" என்று சொன்னேன். அதற்கு அந்த நடிகை சொன்ன பதில் என்னை ஒரே ஆச்சரியத்தில் மூழ்கடித்து விட்டது. "இதென்ன பிரமாத பருமன்! இப்பொழுது நான் இளைத்து விட்டேன். நான்கு மாதங்களுக்கு முன் எனக்குக் குழந்தை பிறந்திருந்த சமயம் நீங்கள் என்னைப் பார்த்திருந்தால் என்ன சொல்லியிருப்பீர்களோ!" என்றார் அந்த நடிகை. "இளைத்த திருமேனியே இப்படியா?" என்று வியந்தேன் நான்.

* * *

சில வருஷங்களுக்கு முன்பு வெளிவந்த ஒரு புராணப் படத்தைப்பற்றி நான் விமர்சனம் எழுதியிருந்தேன். அதில் கதாநாயகி பாகத்தில் நடித்தவர் அந்தக் காலத்தில் பிரபல நடிகையாக இருந்தவர். 'படத்தில் நடிப்பு சர்வ மட்டம்; முகபாவமே இல்லை: இதற்கெல்லாம் காரணம் நடிகையின் உடல் அளவுக்கு மீறிப் பருத்துப் போயிருப்பதுதான்' என்று அந்த நடிகையைப்பற்றி எழுதியிருந்தேன். சில தினங்களுக்குப் பிறகு நான் அவர்வீட்டுக்குப் போயிருந்தபோது என்னிடமே நடிகையின் தாயார், "அந்த விமர்சகன் கையில் பாம்பு பிடுங்க. என் குழந்தை பருத்துக் கிடக்கிறாள்னு கண் போடறான், பாவி!" என்று திட்டினாள். விமர்சனம் எழுதியது நான்தான் என்பது அந்த அம்மாள் தெரிந்து கொள்ளாமல் இருந்தது என் நல்லகாலம்தான்!

* * *

எனக்குத் தெரிந்த நடிகை ஒருவரின் வாழ்க்கையில் நடந்தது இது. அவரது தேகம் படத்துக்குப் படம் பருத்து வந்தது. தம் சதையைக் கரைக்க அவரும் பல உபாயங்களைக் கையாண்டார். பல மருந்துகளை சாப்பிட்டார்; உபவாசம் இருந்தும் பார்த்தார். எதுவுமே அவருக்கு ஒத்தாசை செய்யவில்லை. ஆறு



மாதங்களுக்குப் பின் அவரைப் பார்த்தேன். சட்டென்று புரிந்து கொள்ள முடியாதபடி அவ்வளவு இளைத்துப் போயிருந்தார். 'கடைசியாக, அவர் எப்படி இளைத்தார்?' என்ற ரகஸியம் இது தான். "நம்ப உடம்பு இளைக்க மாட்டேன் என்கிறதே" என்று ஓயாது கவலைப்பட்டுக் கவலைப்பட்டே அவர் தேகம் இளைத்துவிட்டதாம்! ஆகவே உடம்பு இளைக்க சரியான மருந்து கவலைதான் அல்லவா!

• • •

சினிமாப் பத்திரிகை ஒன்றிலே ஒரு நடிகையின் படம்—ஆர்ட் படமாக—வெளியாகி யிருந்தது. அதைப் பார்த்து சொக்கி விட்டார் கோவைப் பட முதலாளி ஒருவர். தமது படத்தில் நடிக்க அந்த நடிகையை ஒப்பந்தம் செய்ய நினைத்தார். அவர் அந்தப் பத்திரிகை ஆசிரியரிடமிருந்து டெலிபோன் மூலம், அந்த நடிகையின் விலாஸத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டார் முதலாளி. சில மாதங்களுக்குப் பிறகு அந்தப் படமுதலாளியை மேற்படி பத்திரிகாசிரியர் சந்தித்தபோது, "அந்த நடிகையை ஒப்பந்தம் செய்து கொண்டீர்களா?" என்று கேட்டார். அதற்கு அந்தப் படமுதலாளி "நீங்கள் பிரசுரித்திருந்த போட்டோவுக்கும் அந்த நடிகையின் தோற்றத்துக்கும் சம்பந்தமே இல்லை. நீங்கள் பிரசுரித்திருந்த போட்டோவைப் போல் நான்கு மடங்கு பருமனாக இருக்கிறார் அவர்!" என்று பதிலளித்தார்.

• • •

நக்ஷத்திரங்களுக்குக் குரல் இரவல் கொடுக்கும் பல பாடகிகள் ஏன் படங்களில் நடிப்பதில்லை என்பதற்கு அநேக காரணங்கள் உண்டு. சமீப காலமாக இந்த வழியில் பிரபலமாகி வரும் ஒரு பாடகி படத்தில் நடிக்காததற்குக் காரணம், அவர் தேகம் நடிப்பதற்குத் தகுதி

[தொடர்ச்சி 64-ம் பக்கத்தில்]

'காதல் வெள்ள'த்தில் மிதக்கும் இந்த நால்வரையும் (சின்னப்பா, ராஜகுமாரி, கிருஷ்ணன், மதுரம்) ஸ்ரீ கிருஷ்ணா பிக்சர்ஸின் "வனசுந்தரி" தமிழ்ப் படத்தில் இம்மாதக் கடைசியில் சந்திக்கலாம்.

குண்டூசியைக் கேளுங்கள்

இந்த ஊசியில் வெளிவந்துள்ள கேள்விகள் அவ்வளவும் 'காந்திஜி ஸ்தூபி நிதி'க்குக் காணிக்கை அளித்த வாசகர்களின் கேள்விகள்

—ஆசிரியர்

எ. எஸ். கே. மூர்த்தி (சாம்பவர் வடகரை)

'பத்மஜோதி' படத்திற்கு எஸ். டி. ராஜன் என்பவர் கதை எழுதியிருப்பதாக என் நண்பர் சொன்னார். இது உண்மையா? தற்போது அவர் என்ன செய்கிறார்?

பத்மஜோதி கதை வசனம் எஸ். டி. ராஜனால் எழுதப் பட்டதல்ல, ரா. வெங்கடாஜலத்தால் எழுதப்பட்டதாகும்.

டி. வி. ராகவன் (பூனா)

தியாகராஜ பாகவதருடைய தம்பி ஏன் சினிமாவில் நடிக்கவில்லை?

முன்பொரு முறை தமிழறியும் பெருமாள் படத்தில் நடிக்கப் போவதாய் வதந்தி உலவியது. ஆனால் அந்த வதந்தி உண்மையாக முடியவில்லை. காரணம், "நம் அண்ணா கர்ணாம்ருதமாய் பாடி வரும்போது நமக்கெங்கே பெயர் கிடைக்கப் போகிறது" என்று அவர் நினைத்திருக்கக் கூடும்.

* * *

லலிதா, பத்மினி—இவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள்? சொந்த ஊர் எது?

நாயர் குல மங்கையரான இவர்களது சொந்த ஊர் திருவனந்தபுரம்.

* * *

பேபி (குமாரி) கமலா எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? விலாஸம் என்ன?

சைவ பிராமண ஜாதியைச் சேர்ந்தவர் கமலா. விலாஸம் :—அப்பு முதலிதெரு, மைலாப்பூர், சென்னை.

எம். பழனிமுத்து (கொத்தவாச்சேரி)

என். எஸ். கிருஷ்ணன் இப்பொழுது எந்தப் படத்தில் நடிக்கிறார்? விலாஸம் என்ன?

சொந்தப்படமான மணமகள்; கிருஷ்ணா பிக்சர்ஸின் வனசுந்தரி இவைகளில் அவர் நடித்து வருகிறார். வெங்கடராமய்யர் தெரு, தி-நகர், சென்னை—17.

"கலைப்பிரியன்" (சென்னை)

"மந்திரி குமாரி" படத்தில் "அந்தணப் பஞ்சமே" என்று ஒரு இடத்தில் கூறப்படுவது திராவிடக் கழகப் பிரசாரமா? குறிப்பிட்ட எந்த ஒரு ஜாதியினரையும் கலையின் பெயரால் இழிவு படுத்துவது சரியா?

யாரையும் இழிவு படுத்தாது உன்னத நோக்கத்துடன் திகழ்வதே உண்மைக் கலை. கலை உலக வியாபகம் உடையது. ஜாதிமதம், தேசம், பாஷை முதலிய எந்தவிதமான வித்யாசத்தையும் அதில் கலப்பது குற்றமாகும். ஆனால், சமீப காலமாய் சில படமுதலாளிகளும், நாடகக்காரர்களும் தாங்கள் என்ன செய்கிறார்கள் என்பதை உணராமல், பொறுப்பற்ற தன்மையில் தம் படங்களிலும் நாடகங்களிலும் தங்கள் சொந்த விருப்பு, வெறுப்புகளைப்

இந்த மலர் கண்ணி(யி)ல் யார் மயங்கி விழப் போகிருரோ தெரியவில்லை! "வனசுந்தரி"யில் நடிக்கும் பல சுந்தரிகளில் லலிதாவும் ஒருவர்.

புகுத்தி வருகிருர்கள். படவுலகில் "பாக்கிஸ்தானை" உண்டு பண்ணினுல் முடிவில் தங்கள் பண வசூலில்தான் துண்டு விழும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

எம். ஈ. தங்கள் மைதீன் (மைலம்பட்டி)

வைஜயந்திமாலாவின் சொந்த ஊர் எது? அவருக்கு வயது என்ன? எது வரையில் படித்திருக்கிருர்?

மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த மண்டையம் என்ற ஊரைச் சேர்ந்த வைஜயந்தி பள்ளிக்கூடத்தில் படித்ததைவிட வீட்டில் படித்ததே அதிகம். அவருக்கு ஆங்கில பாஷையை எழுதவும் பேசவும் தெரியும். ஆங்கிலேயர்கள் "இனிய பதினேழு" என்பார்களே; அதுதான் வைஜயந்திமாலாவின் வயது.

ஏ. மாரி (உளுந்தூர்பேட்டை)

கட்டின மனைவியைக் கண்ணீர் விட வைத்து விட்டு காதல் மனைவியுடன் கொம்மாளம் அடிக்கிருரே ஒரு ஹாஸ்ய நடிகர்? இதைச் சீர்திருத்தம் என்று கருத முடியுமா?

பின் இல்லையா? கட்டின மனைவியின் காலில் விழுந்து கிடப்பது அந்தக் காலம்; 'கள்ள மனைவியுடன் ஊரறிய உல்லாஸமாய் இருப்பது இந்தக் காலம்! காலத்திற்கு ஏற்றபடி உம் எண்ணத்தையும் நீர் மாற்றிக்கொள்ள வேண்டாமா!

ஏ. தாஸன் பெர்ஞண்டோ
(ருவங் வெல்ல, இலங்கை)

நானும் என் நண்பனும் சினிமாவில் நடிக்கப் போகிருேம். எங்களை வரச்சொல்லி கோயமுத்தூரிலிருந்து கடிதம்கூட வந்துவிட்டது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

தாராளமாய் போய் விட்டு வாரும். இதுவரை நான் எத்தனையோ நடிக நடிகைகளின் "நடிப்பை" சகித்துக் கொண்டாகி விட்டது. ஆதலால் நீங்

கள் இருவரும் சினிமாவில் நடிப்பதை நான் பிரமாதமான கஷ்டமாய் கருத மாட்டேன்!

எஸ். சண்பகப் பிள்ளை
(சாம்பவர் வடகரை)

எஸ். வி. சுப்பய்யா பாகவதர், எம். கே. டி. பாகவதர், ஸி. ஹொன்னப்ப பாகவதர், பி. யு. சின்னப்பா, டி. ஆர். மஹாலிங்கம், ஜி. என். பாலசுப்ரமண்யம், கே. பி. சுந்தராம்பாள், எம். எஸ். சுப்புலக்ஷ்மி, என். ஸி. வஸந்தகோகிலம், டி. கே. பட்டம்மாள், பி. ஏ. பெரியநாயகி-இவர்களில் யாருக்கு சங்கீதத்திலும் நடிப்பிலும், முதல் ஸ்தானம் கொடுக்கலாம்.

பல பாடகர்களின் திறமையை ஒரே மூச்சில் எடை போட்டு விடுவது முடியாத காரியம். ஆதலால், உமக்கு யாருடைய சங்கீதமும், நடிப்பும், மிகப் பிடிக்கிறதோ அவருக்கு நீரே முதல் ஸ்தானத்தைக் கொடும்.

ஏ. துரைசாமி படையாச்சி
(ஹநுமந்தபுரம்)

மந்திரி குமாரியில் எம். ஜி. ராமச்சந்திரன் ஒரு பெண்ணைத் தூக்கிக் கொண்டு சண்டை செய்கிறாரே? அந்தப் பெண் யார்? பெற்றோர்கள் உண்டா? சொந்த ஊர் எது?

அந்தப் பெண்மணியின் பெயர் ஜி. சகுந்தலா. அவருக்குத் தாயார் மட்டும் இருக்கிறார். சொந்த ஊர் சிதம்பரம்.

கே. தங்கவேல் (அரூர்)

எம். கே. டி. பாகவதர் தர்மபுரியில் ஒரு சமயம் ஆசாரியாக இருந்தாராமே; உண்மையா?

பாகவதரின் தகப்பனார் ஷராப் கடை வைத்திருந்தாரென்றாலும், இவர் பால்யத்திலேயே சங்கீதத் துறையிலும், பிறகு நாடகத் துறையிலும் ஈடுபட்டு விட்டார். பாகவதர் திருச்சியில் ஒரு பட்டறையை நடத்தி வந்தார் என்பது மட்டுமே உண்மை.

எஸ். குஞ்சுப்பிள்ளை (அகஸ்தியம்பள்ளி)

மாதுரிதேவி தற்போது நடிக்கும் படம் எது?

மாதுரி நடித்துள்ள 'மர்மயோகி' பொங்கலன்று வெளி வருகிறது. தற்போது "மானவதி" "வீரவாள்" ஆகிய இரு படங்களில் அவர் நடித்து வருகிறார்.

தா. மு. ராமன் (திருவல்லிக்கேணி)

மிஸ் மாலினி, வேலைக்காரி, வாழ்க்கை—இந்த மூன்று சமூகப் படங்களில் உங்களுக்கு மிகப் பிடித்தது எது? காரணத்துடன் விளக்குக.

இம் மூன்றும் நல்ல சமூகப் படங்களே எனினும் "வாழ்க்கை" படமே என் மனதை — ஏன் மற்ற ரசிகர்களின் மனதைக் கூட — அதிகமாகக்

முதல் நடிகை:—என்னவோ கவலையில் மூழ்கியிருக்கிறாயே, ஏன்!

இரண்டாவது நடிகை:—சென்ற பத்து மாதமாகத் தேடுகிறேன்...என் கணவரைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை...

முதல் நடிகை:—பூ! இதற்காகவா கவலை! நான் பத்து வருஷமாகத் தேடுகிறேன். எனக்கு ஒரு கணவன் அகப்படவில்லை, தெரியுமா!...



ஜூபிடரின் "மர்மயோகி"யில் குதிரை சவாரி செய்யும் எம். ஜி. ராமச்சந்திரன்

கவர்ந்திருக்கிறது. காரணம் "வேலைக்காரி" படத்தில் நம்ப முடியாத சம்பவங்கள் சேர்ந்திருப்பதோடு, பக்தியுள்ளவர்களுக்கு அதிருப்தியையும் ஏற்படுத்துகிறது. "மிஸ் மாலினி" தற்கால வாழ்க்கையின் ஒரு அம்சத்தை அழகாக உருவாக்கிக் காட்டுகிறதென்றாலும் உள்ளத்தைத் தொடும் வகையில் இல்லை. "வாழ்க்கை" படமோ வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் சித்தரிக்கிறது. அதோடு பாட்டு, நடனம், நூதனம் எல்லாம் ஒருங்கே பொருந்தியிருக்கின்றன.

பி. சுந்தரராஜ் (உடையகுளம்)

எம். எஸ். சரோஜினி எந்த ஜாதியைச் சேர்ந்தவர்?

தேவதாஸி வகுப்பைச் சேர்ந்தவர் அவர்.

கே. என். வி. பிள்ளை (வடிவ நாகர்கோவில்)

காந்திஜி ஸ்தூபி நிதி வசூலித்துக் கொடுப்பதற்காக நீங்கள் கேள்விகளுக்கு கட்டணம் விதித்தது ரொம்பவும் சரியே. இதுபோல அஸ்ஸாம் பூகம்ப நிவாரணத்திற்கான நிதிக்கும் இதேபோல் பணம் வசூலித்துக் கொடுப்பீர்களா?

இந்திய மக்கள் தாராளமாய் நிதி அளித்து உதவ வேண்டிய கொடூரமான விபத்துதான் அஸ்ஸாம் பூகம்பம். தாராளமாய் உதவும்படியும் கேட்டுக் கொள்கிறேன். ஆனால், காந்திஜி ஸ்தூபி நிதி ஒன்றிற்கு "குண்டூசி" கேள்விகளுக்கு கட்டணம் விதித்ததோடு நிறுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

எஸ். சண்முகம் (நாச்சிக்குறிச்சி)

பள்ளிக்குச் செல்லும் ஆண்பிள்ளைகள் புஸ்தகத்தை கையில் பிடித்துக் கொண்டோ, பையில் போட்டு எடுத்துக் கொண்டோ செல்லுகிறார்கள். ஆனால் பெண் பிள்ளைகளோ புஸ்தகங்களை மார்புக்கு நேராய் பிடித்துக் கொண்டு போவதன் காரணம் என்ன?

எதிர்ப்படும் வாலிபர்கள் எங்காவது தம் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விடுவரோ என்ற பயத்தினால் இந்த மாணவிகள் மார்பை (புத்தகங்களால்) மறைத்துக் கொள்ளுகிறார்களோ என்னவோ!

எஸ். என். நம்பியார் (திருவைகாவூர்)

எம். என். நம்பியாருக்கு என்ன வயதாகிறது? விவாஹம் ஆகிவிட்டதா? மனைவியின் பெயர் தெரிவிக்க முடியுமா?

நம்பியாருக்கு 32 வயதாகிறது. ருக்மணி என்பவரை அவர் மனைவியாகப் பெற்றுள்ளார்.

எம். எஸ். மன்சூர் (தஞ்சாவூர்)

சினிமாப் படத்திற்கு ஏற்றதான கருத்துமிக்க ஒரு கதையை உணர்ச்சிமிக்க வசனத்துடன் நான் தயாரித்திருக்கிறேன். இதைப் படமாக்குவதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்ய முடியுமா?

ஸ்ரீ கிருஷ்ணா பிக்சர்ஸார் அநேகமாக தயாரித்து முடித்துள்ள வனசுந்தரி தமிழ்ப் படத்தின் மூலம் ஸி. ஆர். ராஜகுமாரி என்ற இந்தப் புதிய நடன நக்ஷத்திரம் அறிமுகம் ஆவார்.

ஜுபிடர் பிக்சர்ஸார் பொங்கலன்று வெளியிடப்போகும் [illegible] தமிழ்ப் படத்தில் பிரபல அஞ்சலி தேவி நடிக்கிறார்.

கன்னியின் காதலி படத்தைப் போலவே மர்மயோகியில் அஞ்சலி, மாதுரி ஆகிய 'இரு' தேவி'களும் நடிக்கின்றனர்.

அடேயப்பா! வி. டி.
ராஜகாந்தம் இப்படி
வன சுந்தரியில் அரக்கி
போல் விழிப்பது யாரை
பயமுறுத்துவதற்கோ?

"அந்த அரக்கிச்குப் பயந்துகொண்டு தானே இப்படிப் புளி மூட்டைமீது 'மூட்டை' ஏறுகிறீர்!" என்று கேட்கிறார் வனசுந்தரியில் ஸி.ஆர்.ராஜகுமாரி

"வீட்டிற்காக ஒரு குடம் தண்ணீர்
சுமந்தறியேன். ஆனால் சுதர்சன் படத்
திற்காக இப்படித் தண்ணீர் சுமக்க
வேண்டியதாயிற்றே"—மங்களம்.

சீக்கிரமே திரையிடப்பட விருக்கும் விஜயா ப்ரொடக்ஷன்ஸின் பாதாள பைரவி தமிழ்-தெலுங்குப் படங்களில் பிரதம பாகத்தில் நடிக்கும் மாலதி.

இப்பொழுது சென்னையில் காட்டப் பட்டுவரும் குல்தீப் பிக்சர்ஸின் ஷான் ஹிந்திப் படத்தில் பிரதம நடிகையான பிரபல சுரையா.

கதையில் கருத்து இருக்கிறதா இல்லையா என்பது பற்றி பட முதலாளிகள் கவலைப்படுவதே யில்லை. ஏனென்ருல் கருத்து கதையில் இல்லா விட்டால் அதை எழுதினவரிடம் நிச்சயம் இருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும்! வசனத்தில் நீர் உணர்ச்சியை நிரப்பி விட்டால் மட்டும் பயனேற்பட்டு விடாது. உம் கதையை 'எடுத்துக் கொள்ள வேண்டு'மென்ற உணர்ச்சியை பட முதலாளிகளின் மனதில் நீர் ஏற்படுத்துவதே முக்கியம். இதையெல்லாம் உமக்குச் செய்து தருவதற்கு எனக்கு நேரமில்லை.

எஸ். எஸ். லாஸரஸ் (கோபாலபுரம்)

பி. எஸ். கோவிந்தன் நீண்ட நாளாகப் படங்களில் தோன்ருமல் இருப்பது எனக்கு வருத்தத்தை உண்டு பண்ணுகிறது. அவர் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிருர்?

உமக்கு ஏற்படும் வருத்தத்தை கோவிந்தனுக்குத் தெரிவித்திராஞல் அவரும் வருத்தப்படுவதற்கு சௌகரியமா யிருக்கும். "ஓர் இரவு" படத்தில் அவர் நடிப்பதாக இருந்ததுகூட ரத்தாகி விட்டதாம்.

* * *

மனதைக் கொள்ளை கொள்ளக் கூடிய வகையில் கதை, வசனம் எழுதுபவர்களுக்கு பரிசு ஏற்படுத்தினுல் அப் பரிசு ஸி. என். அண்ணுதுரைக்குக் கிடைக்குமா?

கிடைத்தால் நான் ஆச்சரியப்பட மாட்டேன்!

எம். பீற்றர் மதுரம் (கல்லுக்கூட்டம்)

"உறியில் தயிரிருக்க ஊரெல்லாம் வெண்ணைக்கு அலைவானேன்?" சின்னப்பா தாம் சொந்தமாகத் தயாரிக்கும் வான விளக்கில் தம் மனைவி சகுந்தலாவையே கதாநாயகியாக நடிக்கச் செய்தாலென்ன?

வீட்டில் நடப்பதையெல்லாம் (படத்தின் மூலம்) விளம்பரப்படுத்துவதில்

காஞ்சனாவின் கையிலிருந்து கிளம்பும் அம்பைவிட அவள் கண்ணிலிருந்து கிளம்பும் அம்பு சக்தி மிக்கதாய் தோன்றுகிறதல்லவா? (சந்திரவங்கா—தெலுங்கு)

இஷ்டமில்லாதிருக்கலாம் சின்னப்பாவுக்கு!

எம். ஏ. ஷேக் தாவூது (மேல திருப்பூந்துருத்தி)

வாழ்க்கையில் பாடப்படும் "ஏழைக்கு ஏது இன்பம்" என்ற பாட்டை கே. பி. சந்திரன் பாடியதாக நீர் எழுதியிருந்தீர். ஆனால், இன்னொரு பத்திரிகையிலோ (மாரியப்பாவே எழுதியுள்ள வாழ்க்கைக் குறிப்பில்) இப் பாட்டைப் பாடியிருப்பவர் தாம்தான் என்று குறிப்பிட்டிருக்கிறார். இதில் எதை நம்புவது?

"வாழ்க்கை" படத்திற்காக எம். எம். மாரியப்பா பாடினது உண்மைதான். ஆனால் படத்தில் இடம் பெற்றிருப்பதோ கே. பி. சந்திரனின் குரல்தான். இசைத் தட்டில் மாரியப்பாவேதான் பாடியிருக்கிறார்.

மா. கருப்பையா (சுவாமிமலை)

வாழ்க்கை புகழ் எம். எஸ். திரௌபதி எந்தப் படத்தில் நடித்தாலும் அழுதே தீர்க்கிறாரே? காரணம் என்ன?

சிலர் சதா அழுதுகொண்டே 'வாழ்க்கை' நடத்துவதை நாம் பார்த்ததில்லையா என்ன?

கே. வெள்ளைசாமி (அப்புகாட்-இலங்கை)

"லலிதா மீன் விற்க முற்பட்டால் உணவுப் பஞ்சம் தீர்ந்துவிடும்" என்று அக்டோபர் "குண்டூசி"யில் தமாஷாக எழுதியிருந்தீரே. நான் நிஜமாகவே கேட்கிறேன்—'லலிதா மீன் விற்பதற்கு இலங்கைக்கு வருவாரா?' என்று.

ஓய்! நீர் கொஞ்சம் சும்மாயிரும். தமக்கு மீன் வியாபாரத்தில் நிஜமாகவே அதிக கிராக்கி இருப்பது தெரிந்தால் லலிதா நடனம் ஆடுவதை விட்டுவிட்டு எங்காவது மீன் வியாபாரத்தில் இறங்கிவிடுவாரோ என்ற பயம் ஏற்படுகிறது எனக்கு!

• • •

கே. எல். வி. வஸந்தா தற்போது என்ன செய்கிறார்? ஏன் படங்களில் நடிக்கவில்லை?

வஸந்தா நடிப்பதை நிறுத்திக் கொண்டு, சந்தடியின்றி பட முதலாளினி ஆகியிருக்கிறார். 'கணபதி பிக்சர்ஸ்' என்ற கம்பெனியில் அவர் ஒரு பாகஸ்தர் என்பது உமக்குத் தெரியாதல்லவா?

பி. கோவிந்தராஜன் (தஞ்சாவூர்)

பர்ஸாத் படத்தில் நர்கிஸ் பாடும் பாட்டுகள் அவராலேயே சொந்தக் குரலில் பாடப் பட்டவையா? இல்லையென்றால், இரவல் குரல் கொடுத்திருப்பவர் யார்?

லதா மங்கேஸ்வர் குரல் தானம் செய்துள்ளார்.

கே. எஸ். ரகுபதி (பம்பாய்)

வட நாட்டு பிரபல நக்ஷத்திரமான சுரையா அவருடன் அநேக படங்களில் நடித்த தேவ் ஆனந்தை கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக சில பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்ததே. இச் செய்தி உண்மை தானா? எனின், இத் திருமணம் எப்பொழுது நடைபெறும்?

இவர்கள் இருவரிடையேயும் காதல் இருந்து வருவதாகத்தான் எனக்கும் செய்தி எட்டுகிறது. இதன் விளைவு எப்பொழுது கல்யாணமாக முடியுமோ தெரியவில்லை!

வி. எஸ். பணி (ஊரியா)

பர்ஸாத் படத்தில் நடிக்கும் நர்கிஸுக்கு விவாஹம் ஆகிவிட்டதா? கணவன் பெயர் என்ன? குழந்தைகள் உண்டா?

விவாஹம் ஆகியிருக்கிறது, இல்லை...... இல்லை!

இரவில் தனியாக இருக்கும்போது தான் பார்த்துக்கொள்ள வேண்டும்

KOKSHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

284 படங்களுடன்

விளம்பரத்தினால் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர்கள் நன்றாகவும், தெளிவாகவும், விஷயங்களைப் புரிந்து கொள்ளுவார்கள். நல்லவிதமான 284 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக்சாஸ்திரம் தான் வெகு நன்றாயிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

விலை ரூ. 0—12—0

BED ROOM PHOTOS

படுக்கை அறைப படங்கள்

உங்களுக்கு படுக்கை அறைக் காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 50 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 2-4-0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளுங்கள். 25 படங்கள் கொண்ட சாம்பிள் செட்டின் விலை ரூ. 1-4-0.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்திலேயே இருக்க வேண்டும்.

Indian Book Depot (G.M.)

Azadnagar, Amritsar.

கெம்பராஜ

BALU
BROS

பொதுஜனம் பேசுகிறார்

*படங்களில் கட்சிப் பிரசாரம்

தற்போது தமிழ் நாட்டில் கட்சிப்பித்துக் கொண்ட சிலர் கதாசிரியர்களாகவும், வசனகர்த்தாக்களாகவும் இருந்து வருகிறார்கள். இவர்கள் படத்தின் கதையையே மறந்து, கண்ட இடங்களிலெல்லாம் கதா நாயகனுக்கோ, வில்லனுக்கோ 'பிரசங்கமேடை' அமைத்துக் கொடுத்து, அவன் வாயிலாக தங்கள் கொள்கையைப் பிரசாரம் பண்ண ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்களிடமிருந்து நம் தமிழ்ப் படங்களை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும். ஏனெனில், சர்க்காரும், ஸென்ஸார் போர்டு என்று ஒன்றும் இருப்பதாகவே தெரியவில்லை. சினிமாப் படங்கள் பொழுது போக்கு சாதனமே தவிர கட்சிப் பிரசாரத்திற்காக அல்ல. பொழுது போக்குடன், பாமர மக்களுக்கு நல்லறிவூட்டவும் முயற்சிக்க வேண்டுமே தவிர, அவர்களுக்கு இருக்கும் அறிவையும் கட்சிக் குட்டைகளைக் குழப்பி, போக்கடிப்பது சரியல்ல! நம் படமுதலாளிகள், படங்களில் வசனத்திற்கும் வசனகர்த்தாவிற்கும் அதிகப் பிராதான்யம் கொடுக்காமல், படத்திற்குத் தேவையான அளவுக்கே வசனங்களை எழுதுமாறு பார்த்துக் கொண்டால்தான் நம் தமிழ்ப் படக் கலை முன்னேறும்.

எம். என். வெங்கட்டராமன்,
கல்யாண்.

நாட்டியக் கலையா ?

நாட்டை சீர்திருத்தவும், ஆண்டவனை அடையவும் நாட்டியக் கலையை கற்றுக் கொண்டு நாட்டியம் ஆடினார்கள் முன்னோர்கள். ஆனால், நம் படங்களிலுள்ள நாட்டியத்தைப் பார்த்தால் காமத்தைத் தூண்டுவதாக இருக்கிறது. சமீபத்தில் வெளிவந்த ஒரு படத்தில் மார்வாடி நாட்டியம் ஆடுகிறாள் ஓர் நடிகை. அந்த நாட்டியத்தைப் பார்த்தால் 'மார்பைக் காட்டுவதற்குத்தான் அந்த மார்வாடி நாட்டியமோ' என்று தோன்றுகிறது. ஆந்திர அழகிகள் நாட்டியம் என்றால் ஆடையில்லாமல் ஆடுவது என்பதும் தெரிந்த விஷயமே! நாட்டியக் கலை நசித்துப் போகாமலும் பாரதப் பெண்களின் கற்பு காற்றில் பறக்காமலும் சினிமாவில் நாட்டியம் ஆடும் சகோதரிகளுக்கு நல்ல முறையில் ஆடை தேர்ந்தெடுத்து ஆபாசமில்லாமல் நாட்டியம் ஆடும்படி முதலாளிகளும் ஸென்ஸார் போர்டும் கவனிப்பார்களா!

எ. . கே. டி. ராஜ்,
உளுந்தூர்ப்பேட்டை.

பட முதலாளிகளுக்கு!

பில்ம் விசாரணைக் கமிட்டி சென்னையில் விசாரணை நடத்திய போது ஸ்ரீ. ரஞ்சன், "காலேஜ் மாணவர்களை அதிகமாக சினிமாவில் சேர்த்து நடிக்க வைக்க வேண்டும்" என்று கலாசாலை மாணவர்களுக்குப் பரிந்து பேசியிருக்கிறார் சினிமா உலகில் புகுந்த பட்டதாரிகள் சாதித்தவைகளைப் பற்றி ஜூலை மாத குண்டூசியில் 'வெட்டுக்கிளி' எழுதியிருக்கும் சில ரஸமான தகவல்களை நேயர்கள் படித்திருப்பார்கள் என எண்ணுகிறேன். சினிமாவில் சேர்ந்து உழைப்பதற்கு காலேஜ் படிப்பும் கலாசாலைப் பட்டமும் தேவையில்லை. சினிமாக் கலையை முன்னேற்ற வேண்டுமானால் நடிப்பில் தேர்ச்சியும் கற்பனைத் திறமையும், ரஸிக உள்ளமும், உயர்ந்த மனப்பான்மையும் இடையறு ஊக்கமும், உழைப்பும் இருந்தால் போது

---

*பரிசு பெற்ற கடிதம். எழுதியவர் : எம். என். வெங்கட்டராமன், கல்யாண், பம்பாய்.

மானது இத்தகைய யோக்யதாம்சங்கள் காலேஜ் மாணவர்களிலடயேதான் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இவை சாதாரண மனிதனிடம்கூடக் காணப் படலாம். இத் திறமை உள்ளவர்கள் யாராயிருந்தாலும் சரி அவர்களை சினிமா உலகில் ஆர்வ மூட்டினால்தான் சினிமாவை ஒரு கண்ணியமான—பாமரர்களை முன்னேற்றும் ஒரு சிறந்த கலையாக மதிக்க முடியும்.

ஸ்ரீதர்,
மதுராந்தகம்

வெட்கமில்லையா?

நம் தமிழ் நாட்டு நடிகைகள் எவ்வளவோ மரியாதையுள்ளவர்களென்று நினைத்துக் கொண்டிருந்தேன். சமீபத்தில் இந்த நினைவெல்லாம் அடியோடு அழிந்து விட்டது. காரணம் இதுதான்: இங்கு எந்தத் தெருவுக்குச் சென்றாலும் அங்குள்ள சுவர்களில் நம் பிரபல நடிகைகளின் உருவப் படங்கள் ஒட்டியிருப்பது நம் கண்ணுக்குத் தென்படும். உடனே அது ஒரு புதுப் படத்தின் விளம்பரமாய் இருக்கும் என்று கிட்டப் போய்ப் பார்த்தால், என்ன ஏமாற்றம்! அங்கே இருப்பது பட விளம்பரமில்லை. ஆனால், பீடி விளம்பரம். நடிகை, கையில் ஒரு பீடிக் கட்டுடன் காட்சி அளிப்பார். சீ! எவ்வளவு கேவலம்! லட்சம் லட்சமாக சம்பாதிக்கும் நடிகைகள் தங்களைச் சொற்பப் பணத்திற்காக—ஒரு நிமிஷ நேரத்தில் புகைத்துத் தள்ளும் பீடிக்கு விளம்பரச் சரக்காக மாற்றிக் கொள்வது சரியா? வெட்கமில்லையா? பீடியில் மட்டுமில்லை; இன்னும் எத்தனையோ மட்டமான விற்பனைச் சரக்குகளில் நம் நடிகைகள் தங்களை விளம்பரச் சரக்காக மாற்றியிருப்பது பலர் அறிந்த விஷயம். இனிமேலாவது அவர்கள் இப்படிச் செய்து ரஸிகர்களிடம் மதிப்பை இழக்காது இருப்பார்களா?

“ஜீவன்”
கொழும்பு.

ஆபாஸப் பத்திரிகைகள்

சீர்திருத்தும் நோக்கத்துடன், சினிமா சஞ்சிகைகள் ஏராளமாகத் தோன்றிக் கொண்டிருக்கும்போது சினிமாவை சீர்திருத்துவதாகச் சொல்லிக் கொண்டு ஏராளமான ஆபாஸப் பத்திரிகைகளும்

இலவசம்

எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவித மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 1—12—0; மூன்று புட்டிகள் (பூரா முறை) ரூ.4—0—0

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்டு வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 7 பான்ஸி ரிஸ்டுகளும், 7 நியூ கோல்டு மோதிரங்களும் இனம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

SAMYOSI AYURVEDIC PHARMACY (G.M.)

Post Box No. 95,
AMRITSAR

எமது பொங்கல் வாழ்த்துகள் !

உங்கள்
குடும்பங்களுக்கு வேண்டிய
அலுமினியம்
பர்த் ஸ்டேபிரைட்
பாத்திரங்களுக்கு



M.A.எத்திராஜுலு நாயுடு
7-A, ஈவினிங் பஜார் ரோடு
சென்னை.

தோன்றிக் கொண்டிருக்கின்றன. அவை களுடைய ஒரே லட்சியம் என்னவெனில் சினிமா நக்ஷத்திரங்களைப் பற்றிப் பச்சை பச்சையாக எழுதி ரஸிகர்களை ஆனந்தப் படுத்துவது தான் இவர்களின் உருட்டலுக்கு நக்ஷத்திரங்களென்னவோ அஞ்சப் போவதில்லை. நம் அரசாங்கம் பத்திரிகைகளுக்கு சுதந்திரம் அளித்திருப்பது ஊரிலுள்ள விபசாரிகளைப்பற்றி பச்சையாக எழுதுவதற்கல்ல. நக்ஷத்திரங்களை சீர் திருத்த இந்தப் பச்சையான எழுத்துக்கள் பயன்படா. பிரபல சினிமாப் பத்திரிகைகள் அனுஷ்டிக்கும் முறையை—தனக்கும் நக்ஷத்திரத்திற்கும், விஷயம் தெரிந்தவர்களுக்கும் மட்டும் புரியும்படி, அவர்களது செய்கையை மாத்திரம் சொல்லி பெயரை அம்பலப் படுத்தாதிருக்கும் முறையை—மற்ற பத்திரிகாரியர்களும் அனுஷ்டிக்க வேண்டும். அந்த முறையை அனுஷ்டிக்கும் பத்திரிகைகளில் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நமது "குண்டூசி"யில் 'வெட்டுக்கிளி' யார் "நுனிப்புல்" பகுதியில் எவ்வளவு நாஸூக்காக நக்ஷத்திரங்களின் நடத்தைகளைக் கண்டிக்கிறார்.

ஆபாஸப் பத்திரிகைகள்மீது சர்க்கார் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். பொது மக்களாகிய நாமும் இம்மாதிரி பத்திரிகைகளை பகிஷ்கரிக்க வேண்டும்.

கே. ரகுபதி,
கும்பகோணம்.

சினிமாவில் வசனம்

தமிழ்ப் படங்களில் இரண்டு விதமான வசனங்கள் காணப்படுகின்றன. ஒன்று இலக்கண இலக்கியத்துடன் கூடியது. மற்றொன்று கொச்சையானது. நாள் பூராவும் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்த தொழிலாளி சினிமாவில் கதா பாத்திரங்கள் மூச்சு விடாது சரம் சரமாகப் பேச்சுப் பாணங்களைத் தொடுத்தால் வருத்தப் படாமல் என்ன செய்வான்? ஆகவே, நம் படங்களின் வசனம் அடக்கமாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டும், மருதநாட்டு இளவரசி, மந்திரி குமாரி போன்ற படங்களில் வரும் வாய்க்கெட்டாத அகராதி வார்த்தைகளை உபயோகிக்காமல், அரிய, இனிய சிறிய வார்த்தைகளைக் கையாண்டால்தான் மக்கள் பெரிதும் விரும்புவர்.

என். கல்யாணராமன்,
அறந்தாங்கி.

நான்கு பைசாவுக்கு சினிமா!

சினிமாத் தியேட்டர்களில் உங்களுக்குத் தெரிந்த வரையில் குறைந்த கட்டணம் எவ்வளவு என்று சொல்லுங்கள்—ஒரு அணா என்கிறீர்களா? — இது தெரிந்தால் பொள்ளாச்சி அன்பர்கள் கட்டாயம் சண்டைக்கு வந்துவிடுவார்கள். ஏனென்றால், அவர்கள் மேற்சொன்னதில் மூன்றில் ஒரு பங்கு தொகையைக் கொடுத்து சினிமாப் பார்த்திருக்கிறார்கள். சுமார் 14 வருஷங்களுக்கு முன்பு அந்த ஊர் செல்லம் டாக்கீஸில் (போட்டி காரணமாக) 1 அணாவாகவும், நாராயணா டாக்கீஸில் அரையணாவாகவும், செல்லம் டூரிங் டாக்கீஸிலோ நான்கே பைசாக்களாகவும் கடைசி வகுப்புக்குக் கட்டணங்கள் இருந்தனவாம்!

ஆர். பாலசுப்ரமண்யத்திடம் மாணவியாய் இருந்தவர் எம்.டீ., மீனலோசனி
இந்தியாவின் ஒரே ஸ்திரீ ஒலிப்பதிவாளர் மிஸஸ் எ. நாராயணன்.
6
5½
5
கோகிலகான
நடிக்கும் முதல் படம்
அலங்காரின்
தயாரிப்பு
...ஆனல், எம்.எஸ்.ஸின் முதல் படம் "சேவாசதனம்"
கிருஷ்ணன் வேஷம் போட்ட முதல் நடிகை எஸ்.டி. சுப்புலக்ஷ்மி
கோவிந்தராமின் உன்னதப் படம்
மோக்ஷம்
வஸுந்தரா..
வஸந்தகோகிலம்
நடிப்பது
இந்திய ஸ்திரீ டைரக்டர்கள் இருவர் டீ.பி.ராஜலக்ஷ்மி, பாய் ஜதன் பாய்

கடைசி வரையில் காதை மறைத்தபடியே
நடித்து, மறைந்த நட்சத்திரங்கள்
கே.டி.ருக்மணி, கே.எல்.வி. வஸந்தா
கலப்பு மணம்
எம். ஆர். சந்தானலக்ஷ்மி எம். ஆர். துரைசாமி ஐயங்கார்
முஸ்லீம்களல்லாத இரு நவாப்கள்!
M.E.T.
135
"டிராம் கார் இதுதானா...!"
ராஜா சாண்டோ
முழு லக்ஷம் ரூபாயில் தயாரித்த படம்...
கே.பி.எஸ். நடித்தது.
அது அந்தக் காலம்! சாதாரண படத்திற்கே 3 லக்ஷம் பிடிப்பது இந்தக் காலம்!
ASPRO
ஆஸ்ப்ரோ விளம்பரப் படத்தின் மூலம் சுந்தரியாய் திரைக்கு வந்தார்.
செட்டி மில். மதுரை

எஸ். டி. கள்ளபிரான்

வீன காலத்தில் சினிமாப் படங்கள் பார்ப்பதை ஜனங்கள் முக்கிய பொழுது போக்காகக் கொண்டு விட்டனர். அவர்களுக்கு அவை பொழுது போக்காக இருப்பதுடன் அநேக நல்ல கருத்துகளையும் வெளியிடக் கூடியதாக இருக்கின்றன. படத் தயாரிப்பாளர்கள் அவற்றை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கு நல்ல சந்தர்ப்பமும் வாய்த்திருக்கிறது. அவற்றை நல்ல மார்க்கத்தில் உபயோகித்தால், ஜனங்கள், முக்கியமாக பாலர்கள் திருந்த வழி இருக்கிறது. ஏனெனில், குழந்தைகள் பள்ளி செல்லும் வயதை அடையும் முன்பே படங்களைப் பார்க்க அதிக ஆவல் கொள்வது இயல்பு. அக் காலத்தில் படத்தைப் பார்த்து விஷயங்களைத் தெரிந்து கொள்வது சுலபமாகிறது. படத்தைப் பார்த்தால் குழந்தைகள் இலகுவில் மறப்பதில்லை. வெகுகாலம் அவற்றின் மனதில் அதிலுள்ள விஷயங்கள்பதிந்து கிடக்கின்றன. இதை நாம் கண்கூடாகப் பார்க்கலாம். குழந்தைகள் படத்தைப் பார்த்துவிட்டு வந்தால் அதே ஞாபகமாகவே இருக்கின்றன.

பல தேசங்களிலும் படத்தின் மூலம் கல்வியைப் புகட்ட முனைந்திருக்கின்றனர். அதற்கு திருஷ்டி போதனை முறை என்று பெயர். இந்திய சர்க்கார் இதை உணர்ந்திருந்தும், அவர்கள் அதற்கான ஏற்பாடுகளை செய்ய முன்வரவில்லை. குழந்தைகளுக்குப் படக் கல்வி அவசியமென்பதை மாஜி இந்திய கவர்னர் ஜெனரலாயிருந்த நமது சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், பிரதம மந்திரி நேரு முதலியோரும் வற்புறுத்தி யிருக்கிறார்கள்.

சிறு பிராயத்தில் படக் கல்வி புகட்டினால் குழந்தைகள் வளர வளர தங்கள் ஞானத்தை விருத்தி செய்து கொள்வதுடன், ஒழுக்கத்துடனும் நடக்க வசதி அளிக்கும். அவர்கள் நடத்தையும் நல்ல முறையில் சீர் திருந்தும். படங்களே அவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக உதவும்.

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து போன்ற தேசங்களில் இது சம்பந்தமான பரீக்ஷை செய்து வருகிறார்கள். பேசும் படம், மௌனப் படம் இவற்றில் எது சிறுவர்களுக்கு நல்லது என்றும் பரீட்சிக்கப்பட்டு வருகிறது. அங்கு சர்க்காரின் கல்வி இலாகா ஆராய்ச்சி செய்வதுடன் உபாத்தியாயர்களும் பேராசிரியர்களும் இதில் தீவிரமாக உழைத்து வருகிறார்கள்.

ஸ்காட்டிஷ் பள்ளி ஆசிரியர்கள் "சிறு குழந்தைகளுக்கு மௌனப் படமே போதுமானது" என்று தங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். "வயது வந்தவர்களுக்குப் பேசும் படம் தான் நல்லது" எனவும் கூறியுள்ளார்கள்.

இன்னும் சில இடங்களில் 'பிலிம் சொஸைட்டி'கள் உபாத்தியாயர்களுக்கும், பெற்றோர்களுக்கும், பாலர்களுக்குத் திரையிடும்படி படங்களை அனுப்பி உதவி வருகிறார்கள்.

இப் படங்களைத் தயாரிக்க ஆங்காங்கே வாலிபர் சங்கங்கள் ஏற்பட்டு, போதனை பெற வேண்டும். கல்வி இலாகா அதிகாரிகளும், இதற்கென உபாத்தியாயர்களை அமர்த்துவதுடன் தக்க படங்களையும் குறைவான வாடகைக்கு வாங்க உதவி அளிக்க வேண்டும்.

இன்னும் அநேக இடங்களில் உயர்தரப் பள்ளி மாணவர்கள் உல்லாஸ யாத்திரையில், படங்களைப் பிடிக்க அனுமதிக்கப்படுகின்றனர். அவர்கள் தாங்கள் பார்க்கும் இயற்கைக் காட்சிகளையும், தோற்றங்களையும், இன்னும் அரிய பொருள்கள் முதலியவற்றையும் படம் பிடித்துக்கொள்ளுகிறார்கள். அவர்களே அப்படங்களை வெட்டி எடுத்து 'எடிட்' செய்யவும் ஊக்கம் அளிக்கப்படுகிறது. பள்ளிக்கூட கலா உபாத்தியாயர்கள் மேற்பார்வையில் அவை நடைபெறுகின்றன. புஷ்பத் தோட்டத் தொழில் போன்றவைகளும் உபாத்தியாயர்களால் படம் பிடிக்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

இந்திய சர்க்காரும் இம்மாதிரியான கல்வித் துறையில் இறங்கி வேலை செய்ய பள்ளிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும்

ஆஸ்கிரேலியாவில் வகுப்பு அறைகளி லேயே படங்களைக் காண்பிக்க ஏற்பா டாகியிருக்கிறது. இது சம்பந்தமாக கல்வி இலாகாவினர் அநேக முறைகளைக் கையாளுகின்றனர்.

அவர்கள் பள்ளிக்கூடங்களில் பத்து நிமிஷப் படங்களைக் காண்பித்து, மாண வர்கள் பெற்ற ஞானத்தைப் பரீக்ஷை செய்தார்கள். அவர்கள் கையாண்ட முறைகளில் சில பின்வருமாறு :—

1 படத்தைக் காண்பித்து பிறகு பரீட்சித்தல்.

2. படத்தைக் காண்பித்து, விவாதித்த பின்னர் பரீட்சை செய்தல்.

3. படத்தைக் காண்பிக்கும் போதே அதைப் பற்றிய விவரத்தைத் தெரிவித்த பின், மறுநாள் பரீட்சை செய்வது.

ஒவ்வொரு படத்தையும் காண்பிக்கு முன், உபாத்தியாயர் ஒரு தகுந்த முறை யில் அதை ஆரம்பிப்பார். கேள்விகள் கேட்டு படத்தைப்பற்றிய வேண்டிய தக வல்களும் கொடுக்கப்படும். முன் கூறிய அநேக முறைகளில் மூன்றாவது முறை தான் நல்லதெனத் தெரிந்து கொண்ட னர். இப்படிச் செய்வதால் ஐம்பத்தேழு சதவிகித மாணவர்களின் ஞாபக சக்தி அதிகமாகிறது எனக் கண்டு கொண்டிருக் கிறார்கள்.

இப் படங்கள் வெற்றியடைய இன் னொரு காரணமும் உண்டு. மாணவர்கள் அடிக்கடி படத்தைப் பார்த்து பழக்க முண்டாவதால் அவர்களுடைய ஞானம் அபிவிருத்தி யடைகிறது. கெட்டிக்காரப் பையன்கள் உள்ள வகுப்பில் பரீட்சை செய்தபோது, அவர்களை விடப் படம் பார்த்து வந்த சாதாரண மாணவர்களே அதிகத் தேர்ச்சியடைந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

இதே போல இந்திய சர்க்காரும், இனி வருங்கால மாணவர்களுக்கு உகந்த முறையில் கல்வி கற்பிக்க தகுந்த நட வடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண் டும். ஆராய்ச்சிக்காக ஆசிரியர்கள். கல்வி மேதைகள், பட உற்பத்தியாளர் கள் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து நம் சர்க்கார் வேண்டியதைச் செய்வார் களென் எதிர்பார்க்கிறேன்.

ரமணீஸ்
பேபிகிரைப்

குழந்தைகளுக்கு ஏற்ப டும் மாந்தம், வயிற்றுப் போக்கு, முதலிய சகல அஜீரணக் கோளாறுகளை யும் போக்கி, புஷ்டியை அளிப்பது.

ஸ்ரீ தென்னிந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி
மதுரை

13432

நக்ஷத்திரம்

பிறந்த நாள்



புஷ்பவல்லி

தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைப் படங்களிலும் ஒருங்கே புகழ்பெற்றுள்ள நக்ஷத்திரங்களில் புஷ்பவல்லி ஒருவராவார். "பால நாகம்மா" தெலுங்குப் படத்தில் மிகப் புகழ் பெற்றபின், "தாஸி அபரஞ்சி" தமிழ்ப் படத்தில் முதன் முதலாகத் தோன்றினார். பிறகு "மிஸ் மாலினி", "சக்ரதாரி" ஆகிய இரு தமிழ்ப் படங்களில் நடித்திருக்கிறார். இம்மாதம் 3ந் தேதி அவருக்கு 26 வயது பூர்த்தியாகிறது.

வருஷத்தின் 12 மாதங்களும் லலிதா-பத்மினியிடமே இருப்பதாகக் கூறலாம். லலிதாவுடன் ஜனவரி மாதம் ஆரம்பித்து பத்மினியுடன் டிஸம்பர் மாதம் முடிவடைகிறதல்லவா! சதா பம்பரம் போல் மேடையிலும், திரையிலும் ஆடிக்கொண்டிருக்கும் இந்த சகோதரிகள் மலேயாவுக்கு விஜயம் செய்யப் புறப்பட்டுள்ளனர். "வனசுந்தரி"யில் இவர்களது நடனம் புது சோபையுடன் விளங்கும் போல் காண்கிறது. லலிதாவுக்கு இம்மாதம் 20வது வயது ஆரம்பமாகிறது.

நடன லலிதா

தமிழ்ப் பட உலகில் கிருஷ்ணன்-மதுரம் ஜோடி போலவே ரத்தினம்-ராஜகாந்தம் ஜோடியும் மிகப் பிரசித்தி பெற்றிருந்தது. ஆனால் காளி என். ரத்தினத்தின் பிரிவுக்கு முன்பே இந்த ஜோடி பிரிந்து விட்டது. சில காலமாக ராஜகாந்தம் எல்லா ஹாஸ்ய நடிகர்களுடனும் நடித்து, தனிப் புகழ்பெற முயன்றுவருகிறார். ராஜகாந்தம் முதன் முதலாக நடித்த படம் "மாணிக்க வாசகர்." தற்போது நடித்து வரும் படம் "வனசுந்தரி." இம் மாதம் ராஜகாந்தம் 35-வது வயதை அடைகிறார்

"வாழ்க்கை" படத்தின் மூலம் டி. ஆர். ராமச்சந்திரன் அடைந்து வரும் பிராபல்யத்தைப் பார்த்தால், இனி அவர் ஹாஸ்ய பாகங்களுக்கு முழுக்குப் போட்டுவிடுவாரோ என்றுகூட நினைக்க வேண்டியதாயிருக்கிறது. நாடக உலகில் திண்டாடி, சினிமா உலகில் தவித்து, முடிவில் நக்ஷத்திரமானவர் ராமச்சந்திரன். "நந்த குமார்" படத்தின் மூலம் திரைக்கு வந்த இவருக்கு 34வது வயது இம் மாதம் பூர்த்தியாகிறது.

பல காலமாய் உப பாத்திரங்களிலேயே நடித்துவந்த எம். ஜி. ராமச்சந்திரனுக்கு சமீப காலமாய் அதிர்ஷ்ட தேவதையின் கிருபா கடாக்ஷம் ஏற்பட்டு வருகிறது. "மோஹினி", "மருதநாட்டு இளவரசி", "மந்திரி குமாரி" ஆகிய படங்கள் மூலம் நிறையப் புகழைச் சம்பாதித்துக்கொண்ட இவரை ஜுபிடரின் "மர்ம யோகி"யில் சந்திக்கலாம். இம்மாதம் இவருக்கு 36வது வயது ஆரம்பமாகிறது.

வாய் பேசாமல் சினிமா உலகில் பிரவேசித்து, நடனத்தின் மூலமே ரஸிகர்களின் உள்ளங்களில் கிளர்ச்சியை உண்டு பண்ணி, பிறகு படங்களில் பேசி நடிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றவர் மலையாள மங்கை பி. கே. சரஸ்வதி. "திருமழிசை ஆழ்வார்" மூலம் தமிழ்ப்பட உலகில் பிரவேசித்த சரஸ்வதிக்கு எதிர்காலத்தில் கதாநாயகி "சான்ஸ்" நிறைய கிட்டும் போலிருக்கிறது. இம்மாதம் அவர் தம் 20-வது வயதில் தாவிக் குதிப்பார்.

"ஷைனிங் ஸ்டார்" நக்ஷத்திரமாக இசைத் தட்டுகள் மூலம் முழங்கி விட்டு, சினிமாவுக்கு வந்து, சில படங்களில் நடித்திருக்கிறார் என். கிருஷ்ணமூர்த்தி. கொஞ்ச காலம் இவர் அகில இந்திய ரேடியோவிலும் உத்தியோகம் பார்த்திருக்கிறார். இவர் மிகப் புகழ் பெற்ற படம் ஜுபிடரின் "என் மகன்" ஆகும். இவர் கடைசியாக நடித்த படம் "விநோதனி" ஆகும். இந்த மாதத்தில் அவர் தம்முடைய 35 வயதிற்கு முடிவு கட்டுவார்.

வருஷத்தின் முதல் மாதமான ஜனவரியில் நம் நக்ஷத்திரங்களுள் முன்னணியில் நிற்கும் ஏழு பேர்கள் பிறந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இம் மாதத்தில் பிறந்த பெண் நக்ஷத்திரங்களுக்கு நடனத்தை பொது அம்சமாகவும், புகழ்க் கருவியாகவும் கொள்ளலாம். இம்மாத ஆண் நக்ஷத்திரங்களோ, ஆரம்பத்தில் பல வருஷங்கள் கஷ்டப்பட்டு இடைவிடா முயற்சிக்குப் பின்னர் உன்னத ஸ்தானத்தை அடைந்துள்ளது கவனிக்கத் தக்கது.

— ஆசிரியர்.

புகையில் தெரிந்த முகம்

[ஆசிரியர்: அ. செ. மு. பிரசுரம்: நவலட்சுமி புத்தகசாலை, *136*, செட்டியார் தெரு, கொழும்பு. விலை 50 சதம்.]

சிறு கதையாக எழுதப்பட்டு, பிறகு நீளக் கதையாக்கப்பட்ட இது சிறு கதையாகவே இருந்திருக்கலாம். ஈழ நாட்டில், கிராமத்தில் ஏற்பட்டதொரு காதலுக்கு பெண்ணின் தகப்பன் இடையூருய் நின்று, கோப வெறியில் தன் பெண்ணையும் அவளது காதலனையும் கொன்று விடுகிருன். சம்பவங்கள் அதிகமில்லை. கதையை நீட்டிச் சொல்லும் ஆசிரியர், ஈழத் தமிழர் வாழ்க்கையை பற்றிப் பல விஷயங்களைக் கோத்துக் கதை சொல்லுகிருர். நாவல்களுக்குத் தேவையான அளவு சம்பவங்கள் இருந்திருந்தால், நூல் மேலும் சுவாரஸ்யமாக இருந்திருக்கும்.

இசை அருவி

[ஆக்கியோன்: திருச்சி ஜி. தியாகராஜன். பிரசுரம்: இசைக்குடிப் பதிப்பகம், விரேசுரம், திருவானைக் கோயில். விலை ரூ. *1-8-0*]

தமிழ் இசை மறுமலர்ச்சி பெற்றுள்ள தமிழ் நாட்டில் புதிது புதிதாய்த் தமிழ்ப் பாடல்கள் வெளிவருவது வரவேற்கத் தக்கதாகும். படிப்பதற்கென்று வெளிவரும் பாடல்கள் போலன்றி, இசை கலந்து இனிப்பதற்காக அமைக்கப்பட்ட இசை அருவி பாடல்கள் உயர்ந்த கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கின்றன.

"தமிழில் நல்ல கீர்த்தனங்கள் இல்லை என்ற குறையைப் போக்க ஸ்ரீ. தியாகராஜன் போன்ருேர் முன்வந்திருப்பது தமிழர்களது பாக்கியமேயாகும்" என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களாலும், "தங்கள் கவித்வத்தை மனமார வாழ்த்துகிறேன்" என்று ஆஸ்தான கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்களாலும், "இயற்கையாகவே இசைப் பாடல் இயற்றும் தன்மை தங்களுக்கு இருக்கிறது" என்று கீவளூர் ஸ்ரீ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களாலும் போற்றப் பட்டுள்ள பாடல் தொகுதி இது.

தெய்வத்தின் மீதும் தமிழ் மொழி மீதும் பாடியுள்ள பாட்டுகள் ஆசிரியரின் கவியுளத்தை வெளிப்படுத்துகின்றன.

வைஜயந்தி

["நவீனன்", டம் டம் பதிப்பகம். மதருஸ்-*1*. விலை அணு *2*.] சிறுவர் கதை குட்டிப் புத்தகம்.

பாலர் மோஹினி

[பாலர் மோஹினி பதிப்பகம், திருச்சி. விலை, அணு *2*.] சிறுவர்க்கான கதைகள் கட்டுரைகள் தொகுதி.

தமிழோசை

[தமிழோசை நிலையம், பவானி, ஈரோடு வழி. தனிப் பிரதி அணு *4*.] தமிழ் வளர்ச்சித் தொண்டாற்ற முற்பட்டுள்ள புதிய மாதப் பத்திரிகை.

கதிர் காமம்

[விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம். விலை குறிப்பிடப்பட வில்லை.] இலங்கையில் புகழ் படைத்த சைவ ஸ்தலமான கதிர்காமத்தைப் பற்றிய ஸ்தல வரலாறும், கதிர்காம வடிவேலர் பதிகமும், கதிர்காமத்தைப் பற்றிய வர்ணனையும் அடங்கிய சிறு பிரசுரம்.



பெண்களைப்பற்றி

1.	பெண்களோடு வாழ்வது எப்படி?	0	3
2.	பெண்களிடம் ஏன் இந்த மோகம்?	0	3
3.	பெண்களிடம் ஆண்கள் விரும்புவது என்ன?	0	3
4.	அழகான பெண்களுக்கு ஆபத்துகள் உண்டா?	0	3
5.	நல்ல பெண்கள் எப்படி இருப்பார்கள்?	0	3
6.	தமிழன் காதல்	0	3
7.	காதல் கடிதங்கள்	0	3
8.	பெண்களும் வசியமும்	0	3
9.	மனைவி தேர்தல்	0	3
10.	காதல் ஒரு மலரா? காமம் அதன் மணமா?	0	3
11.	முத்தமிடுவது தவறா?	0	3
12.	காதலும் கல்யாணமும்	0	3
13.	காதலை வளர்ப்பது எப்படி?	0	4
14.	வாழ்க்கைக்குத் துணைவி வேண்டுமா	0	4
15.	நிர்வாணக் கலை	0	4
16.	முத்தக்கனிகள்	0	3
17.	புரட்சிப் பெண்	0	8
18.	அவள் விபசாரியா? (C.N.A. முன்னுரை)	0	8
19.	பெண்கள் உலகம்	0	12
20.	வேலைக்காரி ரூ.	1	8
21.	நடன சுந்தரி ரூ.	1	0
22.	காதல் பசி	0	4
23.	கர்ப்பத்தடை முறைகள்	0	8
24.	ஓடிப்போனுர்கள் (குயிலன்)	0	6
25.	ஒரே முத்தம்	0	3

முத்தமிழ் நிலையம்

77, வரதா முத்தியப்பன் தெரு,

சென்னை — 1.

ஏற்று விளக்கு

[ஆசிரியர்: ஹுமாயூன். கிடைக்குமிடம்: ஷேக் ரஹிமான், 17, லேன் தெரு, ஆத்தூர், சேலம் ஜில்லா. விலை அணா 8.] நாடகமா, ஸினேரியோவா, கதையா என்ற சந்தேகம் எழாதவாறு "காதல் யந்திரம்" என்று விவரிக்கப்படும் மூன்று,......காதல் சித்திரங்கள்.

லிப்கோ கோல்டன் கைடுகள்

[1. மாடர்ன் இங்கிலீஷ் ட்யூட்டர், 2. தி கௌன்ட் ஆவ் மான்டி கிறிஸ்ட்டோ, 3. ஷார்ட் ஸ்டோரீஸ் பிரம் கிரேட் போயட்ஸ், 4. எஸ். எஸ். எல். ஸி. தமிழ் உரை நூல். கிடைக்குமிடம்: தி லிட்டில் பிளவர் கம்பெனி, விழுப்புரம். விலைகள்: முறையே—ரு. 2-12-0; ரு. 0-8-0; ரு. 0-8-0; ரு. 2-0-0.]

பள்ளிக்கூட உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக 'நோட்ஸ்' புஸ்தகங்கள் வெளியிடுவது ஒரு தனிக் கலையாகத் தற்காலம் திகழ்ந்து வருகிறது. பாடங்களை எளிதில் புரியவைக்கும் உரைகளும், கேட்கப்படக் கூடிய கேள்விகளும், அவைகளுக்குப் பதிலும், முந்திய பரீக்ஷைகளின் கேள்விகளும், அவைகளுக்கான பதில்களும்—இவ்வாறு 'நோட்ஸ்' புஸ்தகங்கள் பல துறையில் மாணவர்களுக்கு உதவி புரிகின்றன. கல்லூரிகளின் கதவுகளுக்குப் பின் ஒளிந்து கொண்டிருந்த கல்வி வசதியை, ஊரிலுள்ள அனைவரும் (பள்ளிக்கூடம் போக முடியாதவர்கள் கூட) தத்தம் இல்லங்களில் பெறுவதற்கு வசதியளிக்கப்படும் ஜனநாயக யுகம் அல்லவா இது.

யுக தர்மத்தை யொட்டி, மாணவர்களுக்குச் சிறப்பான சேவை பிரிந்து வரும் பிரசுராலயங்களில் "தி லிட்டில் ப்ளவர் கம்பெனி" ஒன்று. பல வருஷங்களாக இந்தப் பிரசுராலயத்தின் உரை நூல்கள் அடைந்துள்ள புகழை இவ்வருஷம் இவர்கள் வெளியிட்டுள்ள நூல்களும் அடையுமென்பதில் சந்தேகமில்லை.

சுத்தானந்தருக்கு வரவேற்பு

சென்ற மாதம் 24ம் தேதி சென்னைக்கு விஜயம் செய்திருந்த ஸ்ரீ யோகி சுத்தானந்த பாரதியாருக்கு வடசென்னை இந்திய மாதர் சங்கத்தினர் ஒரு வரவேற்பு அளித்தார்கள்.

குழந்தைகள் விரும்பித் தின்பவை

மங்களகரமான
பொங்கல் வாழ்த்துக்கள்

எல்லாவிதமான பட்டு,
மில், கைத்தரி ஜவுளி
களும் கிடைக்குமிடம்.

ஜெயின்
சில்க் ஸ்டோர்ஸ்

62, C. அடையார் பிரிட்ஜ் ரோடு,
அடையார், (காந்தி நகர் எதிரில்)
சென்னை-20.

List of 1st Prize Winners for C. No. 41.

1. Sheokumarlal, Patna, 2. Rajapanda, Bubaneshwar, 3. Bhuvaneshwar Singh, Kanpur, 4. S. A. Dananjaya, Sarathy, Repalle, 5. A. V. M. Sah, Kancheepuram, 6. V. Balasubra-aniam, Trivellore, 7. M. Bala-krishnan, Madras, 8. R. S. Ahlu-valia, Ludhiana, 9. T. J. Das, ankarankoil. 10 Amirchand, Raj-put, Amritsar, 11. P. V. Abdulla, Bezwada, 12. B. Kasturchand Kabra, Golaghat, 13. V. Hariram Joshi, Ludhiana, 14. K. B. Chetri, Deraba bananak, 15. A. C. Bhuloka Rao, Unikili, 16. T. Subramaniam, Malaya and 11 others.

முழு விவரங்களையும் 10-1-51 "ரெயின்போ"வில் காணலாம்.

ரூ 25,000 பரிசு

ரிஜிஸ்டர் நெ. 249. போட்டி நெ. 41.

RAINBOW COMPETITIONS

EV S. NO. 41 ★ 52 to 67 = 235

52	66	65	55
63	57	58	60
59	61	62	56
64	54	53	67

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions No.* 41 on 21·XI·50 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd

V. Ramanath
28/12/50
Agent Madras

M/S. Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/. முதல் இரண்டு நம்பர்கள் சரியானவிடைக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் சீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

முடிவு தேதி 27--1—51. விடை 12—2—51.

பிரவேசக் கட்டணம்: கூபன் 1-க்கு ரு. 1—0—0. 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரு. 5—0—0

266

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்;—59 முதல 74 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும கட்டங்களில, மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும, குறுக்காகவும; எப்படிக கூட்டினாலும் 266 வரும்படியாக அமைக்க வேண்டும. ஒரு எண்ணை ஒரே தடவைதான உபயோகிகக வேண்டும்.

விதிகள்;—தனி வெள்ளைக் காகிதத்தில தேவையான கட்டத்துடன எத்தனை கூப்பன்கள வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆஙகிலததில விளககமாக எழுதபபட வேண்டும. பிரவேசக் கட்டணததை கிராஸ் செய்த போஸடல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செயத ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுபப வேண்டும். வசூலுககுத தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுபபடுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுபபினால் விடை அனுபபப்படும்.

கூபன்கள் அனுப்ப வேண்டிய விலாசம்:—

THE RAINBOW COMPETITIONS No. 43. 306 (21) Mint Street, MADRAS-1.

ரிஜிஸ்டர் நெ. 249. **ரூபாய் 25,000 பரிசு** போட்டி நெ. 44

சரியான விடை Premier Bank of India Ltd., Madras-ல் சீல் செய்து வைககப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல்). முடிவு தேதி 12-2-51. விடை:27-2-51.

பிரவேசக் கட்டணம் கூபன் 1-க்கு ரு. 1/- 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரு. 5/-

2 62

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:—60 முதல் 75 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 262 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

The Rainbow Competitions, No. 44,

306. (21) Mint Street, Madras—1.

வஞ்சம் தீர்ந்தது [22-ம் பக்கத் தொடர்ச்சி]

கிராமத்திற்குப் போனேன். எவ்வித விசேஷ சம்பவமுமின்றி சில நாட்கள் சென்றன. ஒரு நாள் பிற்பகல் நான் தூங்கி எழுந்திருந்து பின்கட்டுக்குப் போனேன். வழியில் சமையலறையில் என் தாயுடன் யாரோ பேசுவது கேட்டு உள்ளே எட்டிப் பார்த்தேன். பதினைந்து வயதுக்கு மேற்படாத ஒரு பெண் என் தாயிடம் கண்ணீர் விட்டபடி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். அப்படிப் பட்ட அழகியை நான் அதுவரை என் வாழ்க்கையிலே கண்டது கிடையாது. உள்ளே போனால் எங்கே அந்தப் பெண் வெளியே போய் விடுவாளோ என்று கதவுக்குப் பின் நின்றபடியே அவள் அழகை ரஸித்துக் கொண்டிருந்தேன். கொஞ்ச நேரத்துக்குப் பின் அவள் அறையை விட்டு வெளியே வந்தாள். கதவுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த என்னை அவள் பார்த்த பார்வை, அந்தக் குறு நகை—இவைகள் தாம் பெற்று வளர்த்த என் தாயைக் கூட அலக்ஷியம் செய்யத் துணிவு கொடுத்தன. அது முதல் அந்த அழகி ஏதாவது ஒரு சாக்கு வைத்துக் கொண்டு என் வீட்டுக்கு அடிக்கடி வந்து போகலானாள். அவள் விஜயத்தினால் என் உள்ளத்தில் ஏற்பட்ட காதல் தீ ஜ்வாலை விட ஆரம்பித்தது.

"என் தாயிடமிருந்து அவளைப்பற்றிய விபரங்களை யெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். கஸ்தூரி என்ற அந்த அழகி, எங்கள் ஊர் சந்திரசேகரய்யரின் மூத்தாளின் பெண். சந்திரசேகரய்யர் வாழ்ந்து கெட்ட பணக்காரர். கை நொடித்துப் போன அவரால் தம் சம்பந்திகளின் ஆசைப்படி சீர் வகைகளுடன் பெண்ணைப் புக்ககம் அனுப்ப முடியவில்லை. ஆகவே கஸ்தூரி மனம் நொந்து, வாழா வெட்டியாக, பிறந்த வீட்டில் இருந்தாள். சிற்றன்னையின் கொடுமைகளுக்கு ஆளாகி—நாயாக உழைத்து வந்தாள். இவ்வளவும் தெரிந்த பிறகு அவள்பால் எனக்கு ஏற்பட்டிருந்த பிரேமை பன்மடங்காகப் பெருகியது.

"ஒரு நாள் அம்மாவிடம் என் அபிப்பிராயத்தை மெதுவாகத் தெரிவித்தேன். அடேயப்பா அவளுக்கு அப்பொழுது வந்த கோபத்தை நினைத்தால் எனக்கு இப்பொழுதுகூட பயமாக இருக்கிறது. இதன் விளைவாக, கஸ்தூரியை என் வீட்டுப் பக்கம் வராமல் தடுத்து விட்டாள்.

"கஸ்தூரியைப் பார்க்காமல் எனக்கு இந்த உலகமே சூன்யமாகப் பட்டது. நான்கு தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் விடியற்காலையில் அதிருஷ்டவசமாக அவளை, நதிக்கரையில் தனியே சந்திக்க நேர்ந்தது. நான் சுருக்கமாக, "உனக்கு நான் புது வாழ்வு தேடித் தருகிறேன், என்னுடன் வந்து விடுகிறாயா!" என்று கேட்டேன்.

"அந்த பாக்கியம் எனக்குக் கிட்டுமா!" என்று கூறி, நன்றிப் பெருக்குடன் என்னைப் பார்த்தாள். வீணை வளர்ப்பானேன். அன்று இரவே பெற்ற தாயைத் தவிக்க விட்டு, கஸ்தூரியுடன் கிராமத்தை விட்டுக் கிளம்பி விட்டேன்.

"நாங்கள் நடுவில் எங்குமே தங்கிவிடாமல் நேரே பம்பாய்க்குப் போய்ச் சேர்ந்தோம். ஒரு ஹோட்டலில் 'ரூம்' எடுத்துக் கொண்டு எங்கள் புது வாழ்க்கையைத் தொடங்கினோம். நான் எங்கெங்கோ வேலைக்காக அலைந்தேன். பலன் ஒன்றும் கிட்டவில்லை. சில தினங்களுக்குள் கையிலிருந்த பணம் பூராவும் கரைந்து விட்டது. 'மறு நாள் என்ன செய்வது' என்றபிரச்னையும் ஏற்பட்டது.

"கவலையுடன் உட்கார்ந்திருந்த என்னிடம் கஸ்தூரி அன்றைய தினசரியில் ஒரு இடத்தை குறிப்பிட்டுக் காட்டினாள். அது ஒரு படக் கம்பெனியார் செய்திருந்த விளம்பரம். பம்பாயில் அப்பொழுது தயாராகி வந்த ஒரு தமிழ்ப் படத்தில் 'கதாநாயகியாக நடிக்க ஒரு அழகி தேவை' என்று கூறியது விளம்பரம்.

"என்ன யோசிக்கிறீர்கள்? நாம் ஏன் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. நம் தரித்திரம் ஓடிப் போகுமே" என்றாள் அவள்.

"அன்று இரவு நீண்ட நேரம் எனக்கும் அவளுக்கும் தர்க்கம் நடந்தது. சினிமாவில் பிரவேசிப்பதனால் நேரிடக்கூடிய பாதகங்களை யெல்லாம் நான் ரொம்ப தூரம் எடுத்துச் சொன்னேன். கடைசியில் அவள் பக்கம் தான் வெற்றி. அந்த ஒரே ஒரு படத்தில் மட்டும் நடித்து விட்டு விலகி விடுவதாகவும், அதனால் கிடைக்கக்கூடிய வருமானத்தைக் கொண்டு நிம்மதியாகக் காலத்தைக்

நடத்தலாம் என்றும் கூறி, அவள் என்னை சம்மதிக்க வைத்து விட்டாள். அப்படம் முடிவடைந்ததும் நாங்கள் ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொள்வது என்றும் உறுதி செய்து கொண்டோம்.

"மறு நாளே அவளும் நானும் அந்தப் படக் கம்பெனிக்குப் போனோம். சம்பந்தப்பட்டவர்களுக்கு ரொம்ப திருப்தி. கஸ்தூரியை ஒரு பெரும் தொகைக்கு தங்கள் படத்தில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் எங்களுக்காக ஒரு தனி பங்களாவையும் அமர்த்திக் கொடுத்தார்கள்.

"ஷூட்டிங் ஆரம்பமான நான்காவது நாள், கஸ்தூரி படபடக்க என்னிடம் ஓடி வந்தாள். படத்தின் டைரெக்டர் தன்னிடம் தகாத முறையில் நடந்து கொள்ள முயன்றதாகவும், அவனை தான் கன்னத்தில் அறைந்து விட்டு ஓடி வந்ததாகவும் சொன்னாள். "கஸ்தூரி நம்மிடம் எவ்வளவு உண்மையுடன் நடந்து கொள்கிறாள்" என்று நாள் அப்பொழுது எண்ணிப் பெருமிதம் அடைந்தேன். கபடி, அவ்வளவும் வெறும் பாசாங்கு என்பதை அப்பொழுதே தெரிந்து கொள்ளாமல் போனேன்!

"நாளாக நாளாக அவளுடைய நடவடிக்கைகளில் பலத்த மாறுதல்கள் ஏற்படலாயின என்னிடம் அவளுக்கிருந்த அன்பு வர வரக் குறையத் தொடங்கியது. என்னை விட்டு ஒரு நிமிஷமும் பிரிய விரும்பாத கஸ்தூரி டைரெக்டருடன் இரவு பகலென்று பாராது சதா சுத்தத் தொடங்கினாள். நான் கேட்டாலும், கண்டித்தாலும் அலக்ஷியமாகவே, அதற்கு பதில் சொல்லி வந்தாள்.

"இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒரு சமயம் நான் கடுமையான ஜுரத்தினால் படுத்த படுக்கையானேன் அதைப்பற்றி அவள் கிஞ்சித்தும் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. இப்படியிருக்கையில், தினசரி இரவில் வெகு நேரம் பொறுத்தாவது வீட்டுக்கு வந்து கொண்டிருந்தவள், திடீரென்று ஒரு வாரம் பங்களாப் பக்கமே வரவில்லை. ஒரு வாரத்திற்குப் பிறகு நான் பங்களா வாசலில் காற்றாட ஒரு நாற்காலியில் சாய்ந்தபடி, 'அவள் எங்கே போயிருப்பாள்?' என்று யோசித்தபடி உட்கார்ந்திருந்தேன். அன்று எனக்கு ஜுரம் கொஞ்சம் மட்டுப் பட்டிருந்தது. புத்தப் புதிய கார் ஒன்று வந்து நின்றது. அதனுள்ளிருந்து கலகலவென்று நகைத்தபடி கஸ்தூரியும் அவளுக்குப் பின்னால் பட டைரெக்டரும் இறங்கினார்கள். அவர்கள் வந்த மாதிரியிலிருந்தே எனக்கு சந்தேகம் தட்டியது. அடுத்த நிமிஷமே கஸ்தூரி என் சந்தேகத்தை நிவர்த்தி செய்துவிட்டாள்.

"மிஸ்டர் ரகு, நான் டைரெக்டரை ரிஜிஸ்டர் மணம் செய்துகொண்டு விட்டேன். இனி இந்த பங்களாவில் உங்களுக்கு வேலையில்லை. இதோ, இதை எடுத்துக்கொண்டு இங்கிருந்து போய் விடுங்கள்" என்று கூறி, அவள் என் கையில்ஒரு கத்தை பத்து ரூபாய் நோட்டுகளை வைத்தாள்.

என் பலஹீனமான நிலையில் எனக்கு அது மேலும் அதிர்ச்சியாக இருந்தது. எழுந்திருந்து அவள் கொடுத்த நோட்டுகளை அவள் மீதே வீசினேன். "அடி பாதகி, துரோகி!" என்று கத்தியபடி அவளை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தேன். ஆனால், நான் சற்றும் எதிர்பாராத வகையில், டைரெக்டர் குறுக்கே வந்து, "வெளியே நடடா, நாயே!" என்று கூறி என் கன்னத்தில் ஒரு அறை வைத்து, என்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினான். அதைப் பார்த்து அவள் நலகத்துக்கொண்டு நின்றாள்.

"அன்றே நான் பம்பாயிலுள்ள தர்மஆஸ்பத்திரியில்போய் படுத்துவிட்டேன். இரண்டுமாதங்கள் எமனுடன் போராடி என் உயிர் மீண்டது. அந்த இரண்டு மாதங்களும் ஒரு அனாதையைப்போல் ஆஸ்பத்திரியில் கிடந்தேன். ராதா, அவள் ஒரு கொடிய விஷப்பாம்பு என்று தெரியாது பால் வார்த்துவிட்டேன். ஆனால், அந்தக் கிராதகி உயிரோடிருந்து மேலும் சமூகத்துக்குத் தீங்கிழைக்க விடமாட்டேன். அதை நசுக்குவதுதான் இப்பொழுது என்னுடைய ஒரே லக்ஷியம். அதற்குத்தா சமயத்தை எதிர்பார்த்திருக்கிறேன்."

ரகுநாதன் சொல்லி முடித்ததும் எனக்கு அவன்மீது அனுதாபமே ஏற்பட்டது. "அது சரி ரகு, கஸ்தூரி என்று ஒரு தமிழ்ப்பட நடிகை இருக்கிறாளே என்ன?" என்று கேட்டேன் நான்.

"இல்லை, கஸ்தூரி என்ற அவளுடைய பெயர் சினிமாவில் சேர்ந்ததுமே மறைந்துவிட்டது. அவளுடைய சினிமாப் பெயர் வேறு ஒன்று. அதை மட்டும் நீ இப்பொழுது கேட்காதே நீயே அதை ஒரு நாள் தெரிந்து கொள்ளுவாய். இந்த எட்டு வருஷங்களில் அவள் பலபடங்

களில் நடித்து, இன்று நக்ஷத்திரமாகப் பிரகாசிக்கிறாள்'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு கூறினான்.

• • •

சில மாதங்கள் விசேஷம் எதுவுமின்றி ஓடிவிட்டன. அன்று பொங்கல் திருநாள். நகரில் எங்கு திரும்பினாலும் ஒரே பேச்சுத்தான். சுவர்ணதேவியையும் அவள் நடித்த "சிதைந்த வாழ்வு'' என்ற படத்தைப் பற்றியும்தான். அன்று அப்படம் நகரின் பிரபல தியேட்டரில் திரையிடப்படவிருந்தது மட்டுமல்ல. முதல் காட்சியில் நடிகை சுவர்ணதேவி மேடை மீது தோன்றுவார் என்பதும்தான் பரபரப்புக்கு முக்கிய காரணம்.

சினிமாப் பித்தனான நான் அன்று அக்காட்சிக்குப் போவதென முடிவு செய்தேன். சுக வாழ்வையே வெறுத்துவிட்டதாகச் சொல்லிக்கொண்டிருந்த ரகு, தன்னையும் அன்று அக்காட்சிக்கு அழைத்துப் போகும்படி கேட்டது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ரகுவை நான் அதற்கு முன் பலமுறை படம் பார்க்க வருந்து அழைத்த போதெல்லாம் அவன் மறுத்திருக்கிறான். அப்படிப் பட்டவன் வலுவில் அன்று தன்னை அழைத்துப் போகும்படி கேட்டது எனக்கும், என் குடும்பத்தாருக்கும் வியப்பாக இருந்தது.

அன்று மாலை தியேட்டரில் ஏகக் கூட்டம். "ரகு, திரும்பிவிடலாமா, நாளை படத்தைப் பார்த்துக் கொண்டால் போகிறது'' என்றேன்.

ரகு, தான் மறுநாள் உயிரோடு இருப்பது நிச்சயமில்லை என்றும், அன்று எப்படியும் படம் பார்த்தாக வேண்டும் என்றும் பிடிவாதம் பிடிக்கவே, 'பிளாக் மார்க்கெட்'டில் டிக்கெட் வாங்கிக் கொண்டு கொட்டகைக்குள் போனோம். படம் பாதி முடிவடைந்து இடைவேளைக்காக நிறுத்தப் பட்டது.

அவ்வளவு நேரம் படத்தில் லயித்திருந்த நான், பக்கத்திலிருந்த ரகுவைத் திரும்பிப் பார்த்தேன். அவன் கண்களிலிருந்து நீர் பிரவாகமாக வந்து கொண்டிருந்தது. "ராதா, இன்னும் சில நிமிஷங்களுக்குள் என் லக்ஷியம் நிறைவேறப் போகிறது. என் தாயின் சாபப்படி நான் மனமுடைந்து மடியப் போகிறேன். ஆனால், அதற்கு முன்னால் அந்த விஷப் பாம்பை நான் போகும் இடத்துக்கு அனுப்பப்போகிறேன்'' என்று ஆவேசத்துடன் பேசினான் ரகு. தன் இடையில் எனக்குத் தெரியாது அதுவரை ஒளித்து வைத்திருந்த ஒரு குத்துவாளை எடுத்துக் காட்டி, "இது தான் என் வஞ்சம் தீர்க்கப் போகிறது'' என்றான். தொடர்ந்து, "ராதா, இதோ இப்பொழுது மேடை மீது தோன்றப் போகும்-படத்தின் கதாநாயகி-சுவர்ணதேவிதான் நான் பால் வார்த்த நல்ல பாம்பான கஸ்தூரி. அதை நசுக்கப் போகிறேன்'' என்று கூறிப் பல்லைக் கடித்தான்.

அவன் அப்படிக் கூறிக் கொண்டிருக்கும் போதே, நக்ஷத்திரம் சுவர்ணதேவி மேடை மீது வந்து நின்று சபையோரைக் கைகூப்பி வணங்கினாள். "ரகு, நீ செய்யப் போவதை நான் தடுக்கப்......'' என்று கூறி முடிப்பதற்குள் அது நடந்து முடிந்து விட்டது. கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் ரகு எழுந்து நின்று குத்துவாளை மேடையை நோக்கி வீசி விட்டான்.

குத்துவாள் குறி தவறாது நக்ஷத்திரத்தின் மார்பில் பாய்ந்து அவள் பிணமாக விழுந்தாள். கொட்டகையில் ஒரே ரகளை. சில போலீஸ்காரர்கள் ரகுவின் பக்கம் பாய்ந்து வந்தார்கள். ஆனால், அவன் கூட்டத்தை முரட்டுத்தனமாகத் தள்ளிக் கொண்டு மேடைமீது ஏறி, நக்ஷத்திரத்தின் மார்பிலிருந்த குத்துவாளை உருவித் தன் கையில் எடுத்துக் கொண்டான். கொட்டகையே அதிரும்படியாக கோரமாகச் சிரித்தான். யாரும் வந்து தடுப்பதற்குள் குத்துவாளைத் தன் மார்பில் பாய்ச்சிக் கொண்டு கீழே சாய்ந்து விட்டான். இதெல்லாம் சில விநாடிகளுக்குள் நடந்து முடிந்துவிட்டது. திகைப்பிரமை அடைந்துநின்ற என் வாய், "ரகுவின் வஞ்சம் தீர்ந்தது!'' என்று முணுமுணுத்தது.

மறு நாள் பத்திரிகைகளில் பின் கண்ட செய்தி பிரசுரிக்கப்பட்டது;

தியேட்டரில் கொலை

"நேற்று மாலை பிரபல நடிகையான சுவர்ணதேவி ஒரு பைத்தியக்காரனால் கொலை செய்யப் பட்டாள். கொலை செய்த அந்தப் பைத்தியம் தானும் தற்கொலை செய்து கொண்டு விட்டது. 'கொலைக்குக் காரணம் ஒன்றும் இல்லை; பைத்தியத்தின் செயலே' என்று பஞ்சாயத்தார் முடிவு செய்தனர்.''

ஆனால் சுவர்ணதேவியின் கொலையுண்டதன் உண்மைக் காரணம் என்னையும், இறைவனையும் தவிர வேறு யாருக்குத் தெரியும்?

நுனிப்புல்

[26-ம் பக்கத் தொடர்ச்சி]

யற்றபடி பருமனுக இருப்பது தான். இனிய சாரீரம் கொண்ட அவருடைய புகழுக்கு அவருடைய சரீரம் உதவ மறுக்கிறது. இந்தக் காரணத்தினுல்தான், இப்பொழுது தயாராகிவரும் ஒரு புராணப் படத்தில் நடிக்க முதலில் ஒப்பந்தம்செய்யப்பட்ட அவருக்கு அந்த 'பாக்கியம்' கிட்டவில்லை.

• • *

நக்ஷத்திரங்களின் பருமன் விஷயமாகச் சொல்லும் போது, சில மாதங்களுக்கு முன் பிலிம் விசாரணைக் கமிட்டி சென்னையில் விசாரணை நடத்திய சமயம் நிகழ்ந்த ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. கமிட்டியின் முன்பு சாக்ஷியம் அளித்த ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன், "பருத்த நடிகைகளைப் படங்களில் நடிக்க அனுமதிக்கக் கூடாது" என்று தம் அபிப்பிராயத்தைக் கூறினுர். நடிகைகளைப் பற்றிக் குறிப்பிட்ட அவர் நடிகர்களை மறந்து விட்டாரா? அல்லது நம் நடிகர்களில் யாருமே பருமன் இல்லை என்பது அவர் அபிப்பிராயமா?

டார்ஸான் படங்களில் நடிக்கும் ஜானி வீஸ்முல்லர் என்ற மேனுட்டு நடிகரை ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது ஒரு நிபந்தனையையும் அதில் சேர்த்துக் கொள்வார்களாம். அதாவது, அவர் படத் தயாரிப்பு முடிவடையும் வரையில் அவருடைய கனம் ஒரு குறிப்பிட்ட பவுண்டு எடையிலேயே இருக்க வேண்டும் என்பதுதான். அவரது கனம் அதிகமானுல், ஒரு பவுண்டுக்கு இவ்வளவு பவுன் என்றுஅவர் படக்கம்பெனிக்கு அபராதம் செலுத்த வேண்டுமாம்! இப்படிப்பட்ட ஒரு நிபந்தனையுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதென்ருல், நம் நக்ஷத்திரங்களில் யாருமே தைரியமாக முன்வர மாட்டார்கள்! அப்படி வந்தால், அவர்கள் படத்தில் நடிக்க வாங்கும் தொகையை விட அவர்கள் கட்டும் அபராதத் தொகையே அதிகமாகி விடும்!

காம சாஸ்திரம்

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்-பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிஜ போட்டோ படங்கள்; தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பதுமானவை. இப் புத்தகம் நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களை யெல்லாம் வெளிப்படுத்துகிறது. கல்யாணம் ஆகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ.2-12-0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2-12-0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ 5-0-0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

விலாஸம்:

STANDARD CO., (G.M) Jullundur City.

சூர்ய பிரபா [16-ம் பக்கத் தொடர்ச்சி]

நடித்திருக்கிறார். இவ்விரு படங்களிலும் அவரது தோற்றம் ரஸிகர்களின் மனதைக் கவரும் என்று தோன்றுகிறது. இந்தப் படத்தில் நடனம் ஆடவும் அவருக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறதாம். படங்களில் ஆடுவதற்கு சோப்ராவும், வேதாந்தம் ராகவய்யாவும் அவருக்கு பயிற்சி அளித்துள்ளனர்.

ஈஸ்டர்ன் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் தயாரித்துவரும் "லாவண்யா" தமிழ்ப் படத்தில் சூர்ய பிரபா சமீபத்தில்தான் நடித்து முடித்திருக்கிறார். "வினோதா பிக்சர்ஸ்" என்ற படக் கம்பெனியார் தாங்கள் தமிழிலும், தெலுங்கிலும்சேர்ந்தாற்போல் தயாரிக்கப் போகும் படங்களில் நடிப்பதற்கு சூர்ய பிரபாவை ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றனர். இது தவிர, எம். கே. டி. பாகவதர் நடிக்கப் போகும் "மோஹினித் தீவு" தமிழ்ப் படத்திலும் கதாநாயகியாக நடிப்பதற்கு சூர்ய பிரபா ஒப்பந்தம் ஆகியிருக்கிறார்.

சூர்ய பிரபா இதுவரையில் தம் படங்கள் எதிலும் பாடவில்லை; அவருக்கு இரவல் குரல்தான் வாங்கப்பட்டிருக்கிறது. 'ஆனால், இந்தக் குறையை வெகுகாலம் விட்டு வைத்திருக்கக் கூடாது' என்ற எண்ணத்தில் அவர் மணக்கால் நடராஜ ஐயரிடம் இப்பொழுது ஊக்கமாக சங்கீத சிக்ஷை பெற்று வருகிறார். "கொஞ்ச காலத்திற்குப் பிறகு என் படங்களில் நானே பாடுவேன்..." என்று அவர் ஊக்கத்தோடு கூறுவதைப் பார்த்தால், அவர் அப்படி நிச்சயம் செய்தே தீருவார் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுகிறது.

சூர்ய பிரபாவுக்கு மோட்டார் ஓட்டவும், சைக்கிள் சவாரி செய்யவும், நீந்தவும் தெரியும். "ரிங்-டென்னிஸ்" தான் அவருக்கு மிகப் பிடித்தமான விளையாட்டு.

பால்யம் முதலே அன்னியோன்னியமாய் இருந்துவரும் புஷ்பவல்லியும், சூர்ய பிரபாவும் தனித்தனியே இரு பிரபல நக்ஷத்திரங்கள் ஆகிவிட்ட போதிலும், ஒன்றாகவேதான் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். அவர்களது தகப்பனாரான கந்தால தாத்தாச்சாரியார் ராஜ மஹேந்திர புரத்திற்கு அருகில் உள்ள பெந்தபாடு என்ற தம் சொந்த கிராமத்தில் ஒரு மிராசுதாரராய் இருந்தார். அவரது மனைவியின் பெயர் ராம கோட்டம்மா. இவர்களுக்கு பதினாறு குழந்தைகள் பிறந்தனர். ஆனால், இந்த இரு சகோதரிகள் மட்டுமே உயிரு

சூர்ய பிரபாவின் தாயார் ராமகோட்டம்மாவும், அவரது பேரன் (புஷ்பவல்லியின் புத்திரன்) பாபுஜியும்.

டன் இருக்கின்றனர். சூர்ய பிரபாவுக்கு இன்னும் விவாஹம் ஆகவில்லை.

ஆந்திர வைஷ்ணவ பிராமண ஜாதியில் பிறந்த சூர்ய பிரபாவுக்கு இப்பொழுது வயது 21 ஆகிறது. 1929-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் பிறந்தவர் அவர். அவருடைய அசல் பெயர் வெறும் "சூர்யா" தான். சினிமாவில் சேர்ந்ததற்கு அடையாளமாய் அவரது பெயருடன் "பிரபா" சேர்ந்திருக்கிறது.

சிறு பெண்ணுக இருந்தபோது தம் கிராமத்திற்கு இரண்டு மைல்கள் தூரத்திலுள்ள தாடேபள்ளியில் உள்ள பள்ளிக்கூடத்தில் சூர்ய பிரபா நான்காவது வகுப்பு வரையில் படித்தார். பிறகு தகப்பனுர் இறந்ததால் தம் சகோதரியுடன் கல்கத்தாவுக்குச் சென்று விட்டார், 1940-ம் வருஷத்தில் சென்னைக்கு வந்து குடியேறியதும் ஆந்திர மஹில சபாவில் சேர்ந்து படிக்கலானுர். காசி ஹிந்து சர்வ கலாசாலையின் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு இந்த சபையினர் மாணவ மாணவிகளை பயிற்றுவிக்கிருர்கள். சூர்ய பிரபா இந்தப் பரீக்ஷையில் தேற வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்த சபையில் சேர்ந்தார் என்ருலும், இரண்டு வருஷங்களுக்குப் பிறகு தம் படிப்பை நிறுத்திவிட்டார்.

சுமார் ஐந்தடி உயரமும், மாநிறமும், புருபுரும்பான தோற்றமும் உடைய சூர்ய பிரபாவுக்கு தாய் பாஷையான தெலுங்கை நன்ருக எழுதப் படிக்கத் தெரியும். தமிழ் பாஷையை 'கொச்சை' இல்லாமல் பேசவும், சாதாரணமாய் படிக்கவும் கற்றுள்ளார். ஆங்கில பாஷையும் கொஞ்சம் தெரியும். ஆனுல் ஹிந்தி பாஷையிலோ அவர் மத்யமா பரீக்ஷையில் தேறியிருக்கிருர். அதோடு அப் பாஷையை தட்டுத் தடங்கலின்றிப் பேசவும் அவர் பழகியிருக்கிருர்.

மொத்தத்தில், சூர்ய பிரபா எதையும் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசையும், ஊக்கமும் உடையவராகக் காணப்படுகிருர். இது காரணமாகத் தான் அவர் மூன்று நான்கு படங்களில் நடிப்பதற்குள்ளாகவே தமிழ், ஆந்திர சினிமா உலகில் பிரபலம் அடைந்து விட்டார். எதிர் காலத்தில் ரஸிகர்களின் பேராதரவுடன் முன்னணி நக்ஷத்திரங்களாக விளங்கப் போகிறவர்களில் சூர்ய பிரபா ஒருவராய் இருப்பார் என்று நான் தாராளமாய் கூறமுடியும்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)

Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL / 688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள், விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த. சி. தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, (6) MADRAS-1.

பிராஞ்ச்: 134, SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜன்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 62. MAIN St., கொழும்பு-11

பிரம்மலோகம்

ஔவையார்

ஜெமினியின் ஔவையார் தமிழ் வருஷப் பிறப்பு வெளியீடு என்பது நிச்சயமாகி, துரிதமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஒன்றிரண்டு காக்ஷிகளே படமாக வேண்டியது பாக்கியாக உள்ளனவாம். இப்பொழுது சில காக்ஷிகளின் 'ரீடேக்'குகள் நடைபெற்று வருகின்றன.

பாதாள பைரவி

விஜயா ப்ரொடக்ஷன்ஸின் பாதாள பைரவி தமிழ், தெலுங்கு படங்களின் படப்பிடிப்பு முடிவடைந்து, இப்பொழுது நகாசு வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீ. நாகிரெட்டியுடைய மேற்பார்வையில் கே. வி. ரெட்டியின் டைரெக்ஷனில் படம் தயாராகியுள்ளது. தமிழ்ப் படத்திற்கான வசனங்களையும், பாட்டுகளையும் தஞ்சை ராமய்யதாஸ் எழுதியிருக்கிறார். மாலதியும், சௌகார் புகழ் ராமாராவும் பிரதம பாகங்களில் நடிக்கும் ஒரு கிராமியக் கதை இது.

மல்லேஸ்வரி

வாஹினியின் மல்லேஸ்வரியும் வெகு வேகமாகப் படமாகி வருகிறது. பானுமதி படத்தின் பிரதம பாகத்தில் நடிக்கிறார். இப் படத்தைத் தமிழிலும் தயாரிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றனவாம்.

ராணி

ஜூபிடரின் ராணி தமிழ், ஹிந்திப் படங்கள் தயாராகி வரும் வேகத்தைப் பார்த்தால் தமிழ் வருஷப் பிறப்பன்று பவனிக்குப் புறப்பட்டுவிடுவாளென்று தெரிகிறது. பானுமதி, பாலச்சந்தர் பிரதமபாகங்களில் நடிக்கும் இப்படத்தை ஏ. எஸ். ஏ. சாமி டைரெக்ட் செய்து வருகிறார். பானுமதி சம்பந்தப்பட்ட காக்ஷிகள் இப்பொழுது கோவையில் படமாகி வருகின்றனவாம்.

சௌதாமினி

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிக்சர்ஸாரின் சௌதாமினி படப்பிடிப்பு அநேகமாக முடிவடைந்து விட்டதாம். படம் பிப்ரவரி மாதத்தில் திரைக்கு வரக்கூடுமென்று தெரிகிறது. கண்ணாம்பா, ராதா, நாகேஸ்வர ராவ், டி. ஆர். ராமச்சந்திரன், எஸ். வரலக்ஷ்மி பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தை நாகபூஷணம் டைரெக்ட் செய்கிறார்.

பஹார்

ஏவி. எம். ஸ்டுடியோவில் அவர்களது ஹிந்திப் படமான பஹார் (வாழ்க்கை) படமாகி வருகிறது. நாதன் பாத்திரத்தை கரன் திவானும், சாரங்கபாணி நடித்த பாகத்தில் ஓம்பிரகாஷும் நடிக்கிறார்கள்.

ஓர் இரவு

ஏவி. எம். ஓர் இரவு படத்தில் லலிதா சம்பந்தப்பட்ட சில காக்ஷிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டனவாம். 'மேனா'வின் மேற்பார்வையில், ப. நீலகண்டன் டைரெக்ஷனில் உருவாகி வருகிறது.

தேவகி

சேலம் கணபதி பிக்சர்ஸாரின் தேவகி மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் ஆர். எஸ். மணியின் டைரெக்ஷனில் படமாகி வருகிறது. வி. என். ஜானகியும், கண்ணப்பன் என்ற ஒரு புதிய நடிகரும் பிரதம பாகங்களில் நடிக்கிறார்கள். டி. கே. எஸ் பிரதர்ஸ் ஹாஸ்ய நடிகரான சிவதாணுவும் இப்படத்தில் நல்லதொரு பாகத்தில் நடிக்கிறாராம். இப்படத்திற்கென சங்கீத டைரெக்டர் சில ஜோரான ட்யூன்களை அமைத்திருக்கிறாராம். சீக்கிரமே சென்னை மீனம்பாக்கம் விமான நிலயத்தில் இப்படத்திற்கென சில காக்ஷிகள் தயாரிக்கப்படுமாம்.

ராஜாம்பாள்

அருணா பிலிம்ஸின் ராஜாம்பாள் ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் படப் பிடிப்பு ஆரம்பமாகி விட்டதாம். மாதுரி தேவி, கே. சாரங்கபாணி, சிவதாணு ராமசாமி முதலியோர் நடிக்கும் படம் இது.

வனசுந்தரி

சீக்கிரமே திரையிடப் போகும் படங்களில் கிருஷ்ணா பிக்சர்ஸின் வனசுந்தரி ஒன்றாக இருக்கும். நக்ஷத்திர நடிகர்கள் பலர் நடிக்கும் படம் இது. புது வருஷப் படங்களில் இப்படம் சிறந்த படமாக இருக்கக் கூடுமாம். சங்கீதம், நாட்டியம், ஹாஸ்யம் எல்லாம் கவர்ச்சிகரமான முறையில் அமைந்திருக்கின்றனவாம் இப் படத்தில்.

வீர வாள்

மாடர்ன் தியேட்டர்ஸின் வீரவாள் சரித்திரக் கதையும் உருப்பெற ஆரம்பித்து விட்டதாம். பாலச்சந்தர், அஞ்சலி தேவி, லக்ஷ்மிபிரபா பிரதமபாகங்களில் நடிக்கும் இப்படத்தின்மூலம் பல புதியமுகங்களை அறிமுகப்படுத்துவாராம் டைரெக்டர் டி. ஆர். சுந்தரம்.

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப் போல் ஒரு குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்.டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது, அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளிவந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்துவிட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

134154

இத்துஷ்ட ரோகத்தினால் பிடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத் தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

BIBI SANTOSH KUMARI

C/o STANDARD CO., :: (G. M.) JULLUNDUR CITY.

Printed by P. ARUNACHALAM at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. GOPAL (Gundoosi), at 25, Godown Street, Madras-1. Telephone: 4316.

JL
NWm, N47 N47.4

GUNDOOSI January 1951 Regd. No. M. 4924